ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி

தொலைபேசி: 91–11–23052205

நிகரி: 91–11–23052219

www.eci.nic.in / www.ecisveep.nic.in


ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

# தேர்தல் கல்வியறிவுக் குழு

## 11ம் வகுப்புக்கான வழிகாட்டிக் குறிப்புகள்



அமைப்பாளர்கள் குறிப்பு





ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

இந்தியத் தேர்தல் ஆணையம்

# தேர்தல் கல்வியறிவுக் குழு

## 11-ம் வகுப்புக்கான வழிகாட்டிக் குறிப்புகள்



## முகப்புரை

இவ்வழிகாட்டிப் புத்தகத்தில், 11–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்தல் கல்வியறிவுக் குழுவின் மூலம் நடத்தப்படும் பாடமுறைகள் இடம்பெற்றுள்ளன. 16லிருந்து 17 வயதுடைய மாணவர்கள் தேர்தல் நடைமுறைகளைச் சார்ந்த தகவல்களை அறிந்து கொள்ளவும், அத்தகவலை மனதில் இருத்தி, நடைமுறைப்படுத்தவும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி வடிவமைக்கப்பட்டுள்ள இப்புத்தகம் தேர்தல் கல்வியறிவுக் குழு ஒருங்கிணைப்பாளருக்கு வழிகாட்டிக் கையேடாகவும் விளங்கும்.

குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள் (Conveners) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் (Nodal Officers) இப்புத்தகத்தில் உள்ள செயல்முறைகளை மாணவர்களிடத்தில் பகிர்ந்து கொண்டு நடைமுறைப்படுத்த ஊக்கம் அளிக்க வேண்டும். 11–ஆம் வகுப்பு மாணவர்கள், தங்களது கல்வியாண்டின் இறுதியில் தேர்தல் தொடர்பாக பின்வருவனவற்றை அறிந்தவர்களாக இருக்க வேண்டும் :

1. வாக்காளராகப் பதிவு செய்வதற்கான வழிமுறைகளை நன்கு தெரிந்திருக்க வேண்டும்.
2. வாக்குச் சாவடியினுள் நிகழும் செயல்பாடுகளைக் குறித்த அடிப்படை அறிவை மாணவர்கள் பெறுதல்.
3. வேட்பாளர்கள் தேர்தலின் போது எவ்வாறு வேட்பு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்பது குறித்தும், தேர்தல் நடத்தை விதிகள், வேட்பாளர் தகுதி நீக்கம் செய்வதற்கான நடைமுறைகள் குறித்துமான அடிப்படை அறிவை மாணவர்கள் பெற வேண்டும்.
4. வாக்குப் பதிவு இயந்திரம்(EVM) குறித்தும், வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதிசெய்யும் கருவி (VVPAT) குறித்தும், தேர்தல் நடைமுறையில் இவ்விரு கருவிகளின் நேர்மையான பயன்பாட்டினையும் மாணவர்கள் அறிதல் வேண்டும்.
5. வாக்கின் இரகசியத் தன்மை குறித்த முக்கியத்துவத்தை மாணவர்கள் மதித்துப் போற்ற வேண்டும்.





அமைப்பாளர்கள் குறிப்பு





அமைப்பாளர்கள் குறிப்பு





## தேர்தல் பள்ளிப் பாடல்

நாமனைவரும் இந்திய வாக்காளர்.
இந்நாடே எமது பெருமிதம்.
குடியாட்சி எமக்குப் பிடிக்குமே.
அனைவரின்  பெருமை இதுவேதான்!.

வாக்கின் பெருமை உணர்வதே
முதற்கண் நமது கடமையாம்.
இதன்வலிமை, இதன் இயல்பு
நன்றாய் உணர்வோம் நாமெல்லாம்!

வாக்களிப்பது உரிமையே
நிர்ப்பந்தம் ஏதும் கிடையாது.
பதினெட்டு வயது எட்டியதும்,
பதிவேட்டில் பதிவது அவசியமே!

வாக்குச்சாவடி அலுவலரோ,
தேர்தல்நடத்தும் அலுவலரோ
படிவம் ஆறை (6) நிரப்பியே
புதிதாய் பெயரைச் சேர்த்திடுவோம்!

படிவம் 7ஐ நிரப்பியே
நீக்கம் செய்ய உதவிடுவோம்!
பெயரில் திருத்தம் செய்திடவே
படிவம் 8ஐ நிரப்பிடுவோம்!
முகவரி மாற்றம் ஒரேதொகுதிக்குள்
படிவம் 8Aவினை நிரப்பிடுவோம்!

தேர்தல் குறித்த தகவல்களை
தினமும் திரட்டிப் பெறுவோமே!
வாக்காளர் பட்டியலில்
நமக்கோர் இடத்தினைப் பெற்றிடுவோம்!
உற்றார் உறவினர் நண்பர்கள்
அனைவருக்கும் இதைஉணர்த்திடுவோம்.
(நாமனைவரும் இந்திய...........)

பேராசை ஏதும் கொள்ளாமல்,
மிரட்டலுக்கும் பணியாமல்,
நெஞ்சை நிமிர்த்திச் சொல்வோம் நாம்,
‘விலைமதிப்பற்ற என் வாக்கு
விற்பனைக்கல்ல, விற்பனைக்கல்ல’.

அள்ளிக்கொடுக்கும் கொடைகளிலே
பாரதத்தின் பெருமைதனைப்
பாரெங்கும் பறைசாற்றும்
வாக்களித்தல் ஒன்றேதான்
நனிசிறந்த கொடையாகும்.
(நாமனைவரும் இந்திய ..........)

**பதிப்பு:**
இந்தியத் தேர்தல் ஆணையம், நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி-110001

இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடங்கள், படங்கள், விளக்கங்கள் ஆகியவற்றின் பதிப்புரிமை
இந்தியத் தேர்தல் ஆணையத்தைச் சார்ந்தது.



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 5 |
| 2. | நோக்கங்கள் | 5 |
| 3. | அமைப்பு முறை | 6 |
| 4. | உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு | 6 |
| 5. | ஒருங்கிணைப்பு அலுவலர்கள் (Nodal Officers) மற்றும் பணிகள் | 6 |
| 6. | ஒருங்கிணைப்பாளர் (Convener) | 7 |
| 7. | இடம் | 7 |
| 8. | தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அமர்வுகள் | 7 |
| 9. | முன்மொழியப்பட்ட செயல்முறை அட்டவணை | 7 |
| 10. | செயல்பாடுகள் | 8 |
| 11. | அமர்வின் அமைப்பு | 8 |
| 12. | தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அணுகுமுறை. | 9 |
| 13. | அறிவுரைகளுடன் கூடிய செயல்படுகள் | 9 |
| | i. சுவர் இதழுக்குப் பங்களிப்பு | 10 |
| | ii. நிர்வசித்ரா-திரைப்படக் காட்சி | 12 |
| | iii. அட்டை விளையாட்டுப் போட்டி- மக்களின் பிரதிநிதியாதல் | 15 |
| | iv. மாடல் மட்டான்-மாதிரி வாக்குப்பதிவு | 17 |
| | v. திரைப்படத்தைத் திரையிடுதல் | 26 |
| | vi. கனவு யந்தர் மற்றும் வாக்குச் சீட்டு தயார் செய்தல் | 28 |
| 14. | செயல்பாடுகளுக்கான தகவல் தொகுப்புகள் | 33 |
| 15. | விரிவாக்கம் மற்றும் சொல் விளக்கம் (Abbreviations & Glossary) | 51 |






அமைப்பாளர்கள் குறிப்பு

## 1. முன்னுரை

அரசியல் சார்பற்ற, நடுநிலையான மற்றும் பாகுபாடற்ற முறையில், இந்தியக் குடிமக்களின் அனைத்து வயதினரும் உற்சாகத்துடன் பங்கேற்று, செய்முறைப் பயிற்சி அனுபவம் வாயிலாக தேர்தல் குறித்த அறிவைப் பெறும் பொருட்டு தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள், நம் நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள், குறிப்பாக, இந்தியா முழுவதிலும் இருக்கும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில், 9 முதல் 12 ஆம் வகுப்பில் பயிலும் வருங்கால வாக்காளர்களைக் குறிக்கோளாகக் கொண்டு அமைக்கப்பட்டு வருகின்றன. இவை எதிர்கால வாக்காளர்களுக்கான தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் என அழைக்கப்படும்.

இக்கல்வியறிவுக் குழுவில், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் உறுப்பினர்களாக இருப்பர். பின்வரும் பகுதிகளில், தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் எவ்வாறு அமைக்கப்படும், அக்குழுவில் பங்குபெறுபவராக, ஒருங்கிணைப்பாளராக இருப்பவர்கள் யார், அவை எங்கே, எப்படி நடத்தப்படும், என்ன செயல்பாடுகள் இக்குழுவில் சேர்க்கப்படும் என்பவை குறித்து விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

## 2. நோக்கங்கள்

(i) மக்களுக்கு தேர்தல் குறித்த கல்வியறிவைப் புகட்டும் விதமாக, அதாவது வாக்காளராகப் பதிவுசெய்தல், தேர்தல் செயல்முறை மற்றும் தொடர்புடைய பொருண்மைகள் குறித்த செய்முறைப் பயிற்சியை அனுபவம் மிக்கவர்களின் வாயிலாகக் கற்பித்தல் ;

(ii) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine(EVM)) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதிசெய்யும் கருவியைக் (Voter Verifiable Paper Audit Trail (VVPAT)) குறித்து பழக்கப்படுத்துதல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் உறுதித்தன்மை, அதன் மீதான நம்பகத்தன்மை குறித்த விழிப்புணர்வூட்டல்;

(iii) தாம் அளிக்கவிருக்கும் வாக்குகளின் வலிமையைப் புரிந்துகொள்வதிலும், வாக்குரிமையை நம்பிக்கையுடனும், வசதியாகவும், நேர்மையான முறையிலும் எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலும் இலக்கிடப்பட்ட மாணவர்களுக்கு, அதாவது வருங்கால வாக்காளர்களுக்கு உதவுதல்;

(iv) உறுப்பினர்களின் முழு ஆற்றலையும் பயன்படுத்தி, தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் தேர்தல் குறித்த அறிவை மக்களிடம் கொண்டு செல்லுதல்;

(v) தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் 18 வயதை அடையும் போது, வாக்காளராகப் பதிவு செய்ய உதவுதல்;

(vi) தேர்தல் குறித்த பணிகளில் தங்களின் பங்களிப்பை மேம்படுத்தவும், தெளிவான மற்றும் நேர்மையான வாக்களிப்பு என்னும் பண்பை அதிகரிக்கவும், 'ஒவ்வொரு வாக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது' மற்றும் 'ஒரு வாக்காளரும் விடுபட்டுவிடக்கூடாது' என்னும் கொள்கையைப் பின்பற்றவும் பொதுமக்களுக்கு உதவுதல்.



## 3. அமைப்பு

ஒவ்வொரு வகுப்பு மற்றும் பிரிவிலும் தேர்தல் கல்வியறிவுக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு பள்ளியின் குறிப்பிட்ட வகுப்பிற்குமான தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் வேறுபட்டிருக்கும். 9, 10, 11, 12 என ஒவ்வொரு வகுப்பிலும் செய்ய வேண்டிய செயல்பாடுகள் குறித்து தனித்தனியே அளிக்கப்பட்டிருந்தாலும், ஒரே வகுப்பைச் சேர்ந்த வெவ்வேறு பிரிவு மாணவர்களுக்கு ஒரே மாதிரியான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் திட்டமிட்ட வகுப்பில் / பிரிவில் வகுப்புவாரியாகப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வகுப்பின் அனைத்து மாணவர்களும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்களாக இருப்பர்.

## 4. உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் / வகுப்பிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்களைக் கொண்டு தேர்தல் கல்வியறிவுக் குழுக்களை நடத்த மாணவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பள்ளியின் ஒருங்கிணைப்பு அலுவலரின் வழிகாட்டல், கலந்தாலோசித்தல் மற்றும் கண்காணித்தலின்கீழ், தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை மேற்கொள்ள பொறுப்புடையவர்களாக இருப்பர்.

மாறாக, ஆசிரியர்களின் வாயிலாக மாணவர்களின் பங்களிப்போடு செயல்பாடுகளை நடத்த பள்ளி நிர்வாகம் அனுமதிக்கலாம்.

## 5. ஒருங்கிணைப்பு அலுவலர்கள் (Nodal Officers) மற்றும் பணிகள்

பள்ளியின் மனிதவளம் / சமூக அறிவியல் (Humanities / Social Science) துறையின் ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்கள், தேர்தல் கல்வியறிவுக் குழுக்களின் ஒருங்கிணைப்பு அலுவலர்களாகச் செயல்படுவர். தொடர்புடைய தேர்தல் கல்வியறிவுக் குழுவின் வழிகாட்டிகளாகவும் அவர்களே செயல்படுவர். தேர்தல் பணி அனுபவம் கொண்ட ஆசிரியர்களுக்கு இப்பணியில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களின் பணி பின்வரும் செயல்களை மையமாகக் கொண்டிருக்கும்: -

(i) மாவட்டத் தேர்தல் அலுவலர் பரிந்துரைக்கும் அமைப்பினைக்கொண்டு, தேர்தல் கல்வியறிவுக் குழுவின் வள ஆதாரங்களைப் பெறுவதற்கு ஒருங்கிணைக்க வேண்டும். தேர்தல் கல்வியறிவுக் குழுவின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான வள ஆதாரங்கள் இணையதளம் வாயிலாக அல்லது மாவட்டத் தேர்தல் அலுவலரால் ஏனைய வழிகளில் வழங்கப்படும்.

(ii) குறிப்பிட்ட தகவல் தொகுப்புகள் / கருவிகளைப் பயன்படுத்தி, பள்ளியில் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களின் பயிற்சியை எளிதாக்குதல்.

(iii) கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்.

(iv) செய்முறை அனுபவம் வாயிலாக வாக்காளர் கல்வி தொடர்பான தகவல் தொகுப்புகளைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல்





30. **தேர்தல் நடத்தும் அலுவலர் (Returning Officer(RO)):-** தேர்தல் ஆணையம், மாநில அரசாங்கத்தின் ஒப்புதலுடன் சட்டமன்ற மற்றும் பாராளுமன்றத் தொகுதிகளுக்குத் தேர்தல் நடத்துவதற்காக நியமிக்கப்படும் மாநில அரசின் அலுவலர்.

31. **வாக்குரிமை (Suffrage) :-** தேர்தலில் வாக்களிக்கும் உரிமை.

32. **வயது வந்தோர் வாக்குரிமை (Universal Adult Franchise) :-** சாதி, மதம், நிறம், வகுப்பு அல்லது பாலினம், ஆகிய எவ்வித வேறுபாடுமின்றி 18 வயது நிரம்பிய அனைத்து மக்களுக்கும் வாக்களிக்க உரிமையுண்டு என்பதாகும்.

33. **வாக்காளர் பெயர் பதிவு (Voter Registration):-** தகுதி வாய்ந்த ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட வாக்காளராக வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்யும் நடைமுறை.

34. **வாக்களிப்பது (Voting):-** தேர்தலில் தனது விருப்பத்தை, தேர்வை வெளிக்கொணர்வது.

35. **வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (Voter Verifiable Paper Audit Trail (VVPAT):-** வாக்காளர்கள் தாங்கள் செலுத்திய வாக்கு சரியான வேட்பாளருக்கு சென்றடைந்ததா என்பதை அறியவே இவ்வகை இயந்திரங்கள் உருவாக்கப்பட்டது. வாக்களித்தபின், அதாவது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் உள்ள நீல நிறப் பொத்தானை அழுத்தினால், வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியில் ஒரு காகிதச் சீட்டு வரும். அச்சீட்டில் வேட்பாளரின் பெயர், சின்னம் மற்றும் பதிவு எண் பதிக்கப்பட்டிருக்கும். இந்த இயந்திரம் வாக்களித்தவர் மட்டுமே காணும் வகையில் கண்ணாடிப் பெட்டியில் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும். இச்சீட்டினை ஏழு வினாடிகள் மட்டுமே வாக்காளர் காண முடியும். பின்பு அச்சீட்டு அடைக்கப்பட்ட பெட்டியில் விழுந்துவிடும். தேர்தல் அதிகாரிகளால் மட்டுமே இவ்வகை இயந்திரங்களை செயல்படுத்த முடியும்.





அறிவிக்கப்பட்டவுடன், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் நடைபெறுவதற்காக இவ்விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

20. **இவர்களில் எவருமில்லை (None of the above** (NOTA)):- இந்தத் தெரிவு அக்டோபர் 2013-ல் அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மற்றும் வாக்குச் சீட்டிலும் வெளியிடப்பட்டது. இதன் மூலம் யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லாதவர்கள் சுயவிருப்பத்துடன், விதி மீறல்கள் எவையும் இன்றி முடிவெடுத்து வாக்களிக்க முடியும்.

21. **வேட்பு மனு (Nomination)**-வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுவதற்காக விண்ணப்பிக்கும் படிவமே வேட்புமனு எனப்படும்.

22. **தேசிய வாக்காளர் தினம் (National Voters' Day (NVD))** :- வாக்காளர்களை பெருமளவில் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், குறிப்பாக இளைஞர்களைப் பதிவு செய்யவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. மேலும் இதன் மூலமாக, வாக்காளர் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

23. **தேசிய வாக்காளர் சேவை தகவு (National Voters' Service Portal(NVSP))**:- (www.nvsp.in) இந்தியத் தேர்தல் ஆணையத்தின்கீழ் செயல்படும் இணையதளம். இதன் மூலம் பொதுமக்களும், தேர்தல் அலுவலர்களும் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

24. **பஞ்சாயத்து (Panchayat)**-இந்தியாவில் தற்போது பஞ்சாயத்து ராஜ் என்னும் ஆட்சி முறை உள்ளது. இதில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிராமப்பஞ்சாயத்து அடிப்படையாக உள்ளது. இது கிராமப் பஞ்சாயத்து (கிராம அளவில்), ஊராட்சி ஒன்றியம் (மண்டல அளவில்), மாவட்டப் பஞ்சாயத்து (மாவட்ட அளவில்) என மூன்று பிரிவுகளைக் கொண்டது.

25. **நேரடித் தேர்தல்** (Plebiscite) மிக முக்கியமாக பொதுநலன் சார்ந்த கேள்வி குறித்து தீர்வெடுக்கும் பொருட்டு வாக்காளர்களின் / மக்களின் நேரடி வாக்கினைப் பெறுதல்.

26. **வாக்குச் சாவடி (Polling Station)**-தேர்தல் நாளன்று வாக்காளர்கள் தங்களின் வாக்குகளைப் பதிவு செய்யும் பொருட்டு, ஒதுக்கப்பட்ட அறை / கூடம். இதனை வாக்குச்சாவடி என்பர்.

27. **வாக்குச்சாவடி தலைமை அலுவலர் (Presiding Officer)**:- இவர் வாக்குப் பதிவு அலுவலர்களின் உதவியோடு வாக்குச்சாவடியில் வாக்குப் பதிவு தொடர்பான பணிகளை மேற்கொள்வார்.

28. **மாற்றுத் திறனாளிகள் (Persons with Disability (PwDs))** :-தேர்தலின் போது உடல் உறுப்புகளில் ஏதேனும் குறைபாடுடைய நிலையில், சிறப்பு வசதிகள் தேவைப்படுவோர். இவர்களுக்கு தேர்தலின் போது சாய்வு தளம், தன்னார்வலர்கள், சக்கர நாற்காலி என அனைத்து வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

29. **பொது மக்கள் வாக்கெடுப்பு (Referendum)**:- மக்களின் பிரதிநிதி யார் என்ற ஒற்றை அரசியல் கேள்விக்குரிய மக்களின் முடிவை நேரடியாகத் தெரிந்து கொள்வதற்கு நடத்தப்படும் தேர்தல்.





(v) எதிர்கால வாக்காளர்களின் திறன் மேம்பாட்டிற்காக தேர்தல் கல்வியறிவுச் சாதனங்களை உபயோகப்படுத்திப் பயிற்சி அளித்தல். ஒருங்கிணைந்து திறன் வளர்க்க ஏற்பாடு செய்தல்.

(vi) புதிய தகவல் தொகுப்புகளை உருவாக்க முயன்று, அதனை மாவட்டத் தேர்தல் அலுவலருக்கு அனுப்பி வைத்தல்.

(vii) மாணவர்கள் / செயற்குழுவுடன் கலந்தாலோசித்து, அந்த ஆண்டிற்கான செயல்பாடுகளின் அட்டவணை ஒன்றை உருவாக்குதல்.

(viii) 12 ஆம் வகுப்பு மாணவர்கள் வாக்களிக்கத் தகுதி பெறும்போது, அவர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்கு வசதி செய்தல்.

குறிப்பு:- ஒருங்கிணைப்பு அலுவலர், தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளில், செயற்குழு உறுப்பினர்களை ஈடுபடுத்துவார்.

## 6. ஒருங்கிணைப்பாளர் (Convener)

ஒவ்வொரு வகுப்பிலும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை நடத்த ஆசிரியர் ஒருவர் இருப்பார். மாற்றாக, பல்வேறு வகுப்புகளின் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்முறைகளை நடத்தும் ஆசிரியர்களின் குழு ஒன்றும் இருக்கலாம். ஆசிரியர்களுக்கான பயிற்சி, ஒருங்கிணைப்பு அலுவலரால் அளிக்கப்படும். தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை நடத்துவதில், ஒருங்கிணைப்பு அலுவலரின் வழிகாட்டுதலோடு ஆசிரியர்கள் செயல்படுவர்.

## 7. இடம்

பெரும்பான்மையான தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகள் அந்தந்த வகுப்பறைகளில் நடைபெறும். இருப்பினும் சில பயிற்சிகள் பள்ளி அரங்கில் அல்லது பள்ளி விளையாட்டு மைதானங்களில் நடைபெறும்.

## 8. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அமர்வுகள்

அமர்வுகள் பயிற்சிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். மேலும் சில பயிற்சிகளை ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் கல்வியறிவுக் குழுக்களால் சேர்ந்து நடத்தப்படலாம். வெவ்வேறு நிலையிலான தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் தனித்தனி பயிற்சிகளைக் கொண்டிருக்கலாம். எனவே, அவற்றிற்காக வரையறுக்கப்பட்டிருக்கும் கால அளவு /அமர்வுகள், கல்வியாண்டில் மொத்தம் 6லிருந்து 8 மணிக்குள் வேறுபடலாம்.

## 9. முன்மொழியப்பட்ட செயல்முறை அட்டவணை

| மாதம் | செயல்முறை | நேரம் |
|---|---|---|
| ஆண்டு முழுவதும் | குடியரசுச் சுவர்-சுவர் இதழ் | |
| ஏப்ரல் | நிர்வசித்ரா-திரைப்படம் | 45 நிமிடங்கள் |
| ஏப்ரல் | வேட்பு மனு குறித்த அட்டை விளையாட்டு | 45 நிமிடங்கள் |
| ஏப்ரல் | மாடல் மட்டான்-மாதிரி வாக்குப்பதிவு | 60 நிமிடங்கள் |



| மாதம் | செயல்முறை | நேரம் |
|---|---|---|
| ஜூலை-ஆகஸ்ட் | திரைப்படம் திரையிடுதல் | 60-120 நிமிடங்கள் |
| செப்டம்பர்-நவம்பர் | சுவர் யந்தர் மற்றும் வாக்குச் சாவடி தயார் செய்தல் | 60 நிமிடங்கள் |
| ஜனவரி (தேசிய வாக்காளர் தினம்) | பேச்சு / விவாதப் போட்டி | 60 நிமிடங்கள் |
| மொத்தம் | | தோராயமாக 5 மணி நேரம் (நிர்வசித்ராவிற்கான கால அளவு சேர்க்கப் படவில்லை) |

## 10. செயல்பாடுகள்

11-ம் வகுப்பிற்கான தேர்தல் கல்வியறிவுக் குழுவின் வழிகாட்டியான இந்நூல், விரிவான ஆறு செயல்முறைகளையும் அதனை நடத்த வேண்டிய முறைகளையும் கொண்டுள்ளது. இதில், சுவர் இதழ் செயல்பாடானது, குழுவினரால் மாதாந்திர அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அனைத்து செயல்பாடுகளையும் நடத்த வேண்டிய கட்டாயமில்லை; அவற்றை கிடைக்கும் நேரத்தைப் பொறுத்து நடத்தலாம்.

## 11. அமர்வின் அமைப்பு

ஒவ்வொரு தேர்தல் கல்வியறிவுக் குழுவும் கொடுக்கப்பட்ட அமர்வின் அமைப்பைப் பின்பற்ற ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**கூடுமிடம்–**தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஓரிடத்தில் கூடும் பொழுது ஒருவரையொருவர் வணக்கம் கூறி வரவேற்க வேண்டும். பின்பு ஒருங்கிணைப்பாளர் முந்தைய அமர்வின் தொகுப்பை 5 முதல் 10 நிமிடத்திற்குள் தொகுத்துரைக்க வேண்டும்.

**நடத்த வேண்டிய செயல்பாடுகள்–**ஓர் அமர்வில் நடத்தப்பட வேண்டிய செயல்பாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைப்பாளர் ஏற்கனவே திட்டமிட்டபடி கொடுக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

**3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்–**அனைத்து செயல்பாடுகளும் தனிநபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு நினைவூட்டல் முறையில் பின்பற்றப்பட வேண்டும்.

(ஒருங்கிணைப்பாளர் வகுப்பிலுள்ள மாணவர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு





11. **தேர்தல்** (Election):– -அரசு நிர்வாகத்தினை வழிநடத்துவதற்காக ஒரு நபரை மக்கள் தேர்ந்தெடுக்கும் செயல்முறை / நடவடிக்கை.

12. **வாக்காளர்**(Elector):- வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று, தேர்தலின்போது வாக்குப் பதிவு செய்யத் தகுதி உடைய நபர்கள்.

13. **தேர்தல் நடைமுறைகளில் பங்கேற்றல் (Electoral participation)**:-ஒருவர் மக்களாட்சி வழியிலான அரசில் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் வாக்காளராக, தேர்தல் அலுவலராக, வேட்பாளராக, அரசியல் கட்சி அல்லது இன்ன பிற பங்காளராக ஈடுபடுதல்.

14. **தேர்தல் நடைமுறை (Electoral Process)**:-மக்களாட்சியில் தேர்தல் செயல்முறைகளின் ஒரு பகுதியாக வாக்காளர், தேர்தல் அலுவலர், வேட்பாளர், அரசியல் கட்சிகள் என அனைவரும் தேர்தல் பணிகளில் ஈடுபடுதல்.

15. **வாக்காளர் பெயர்ப் பட்டியல் (Electoral Roll)**:- பொதுவாக வாக்காளர் பட்டியல் என அழைக்கப்படுவது ஒரு தொகுதியில் உள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களை உள்ளடக்கிய பட்டியல் ஆகும். முறையான பராமரிப்பிற்காக ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியல் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். ஒரு வாக்குப் பதிவு பகுதியில் உள்ள வாக்காளர்களின் விவரங்களை இப்பட்டியல் கொண்டிருக்கும்.


16. **வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை [Electors Photo Identity Card (EPIC)]:-** தனது தொகுதியின் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பதிவு செய்தவர்களுக்கு வாக்காளர் பதிவு அலுவலரால் வழங்கப்படும் அடையாள அட்டை. இது தேர்தலில் வாக்களிப்பதற்கான ஆளறி அட்டையாகக் கருதப்படுகிறது.

17. **வாக்காளர் பதிவு அலுவலர்** [Electoral Registration Officer(ERO)] :- ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியல் திருத்தம் மற்றும் தயாரிப்பு தொடர்பான பணியினை மேற்கொள்வதற்காக இந்தியத் தேர்தல் ஆணையம் மாநில அரசுடன் இணைந்து ஓர் அரசு அலுவலரை நியமிக்கும். இவர் தனது தொகுதியின் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கான சட்டபூர்வமான அதிகாரம் பெற்றவர்.

18. **மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம்** (Electronic Voting Machine):- இக்கருவி தேர்தலின் போது வாக்காளர் தனது வாக்கைப் பதிவு செய்யப் பயன்படுகிறது. இது கட்டுப்பாட்டுப் பகுதி (Control Unit) மற்றும் வாக்களிக்கும் பகுதி (Ballot Unit) என இரண்டு பகுதிகளைக் கொண்டது. இவை இரண்டும் ஐந்து மீட்டர் கம்பி வடம் மூலம் இணைக்கப்பட்டிருக்கும். வாக்குப் பதிவு அலுவலர் வாக்குச்சீட்டினை அளிப்பதற்குப் பதிலாக கட்டுப்பாட்டுப் பகுதி(Control Unit)யில் உள்ள பொத்தானை அழுத்துவார். இதன் பிறகே வாக்காளர் வாக்களிக்கும் பகுதி(Ballot Unit)யில் தான் வாக்களிக்க உள்ள வேட்பாளரையும் சின்னத்தையும் உள்ளடக்கிய நீல நிறப் பொத்தானை அழுத்தி வாக்களிக்க முடியும்.

19. **தேர்தல் நடத்தை விதிகள் (Model Code of Conduct):–** தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களிடம் நடவடிக்கைகள் குறிப்பாக அரசியல் உரையாடல்கள், தேர்தல் நாள் மற்றும் வாக்குச்சாவடியில் அவர்களின் நடவடிக்கைகள், தேர்தல் அறிக்கைகள், ஊர்வலங்கள் குறித்தும் மற்றும் பிற நடத்தைகள் குறித்தும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட வழிமுறைகள் ஆகும். இந்தியத் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நாள்





## 15. சுருக்கம் மற்றும் சொல் விளக்கம்

1. **சட்டமன்றத் தொகுதி** (Assembly Constituency):– ஒவ்வொரு தொகுதியிலும் வாக்காளர் எண்ணிக்கை சமமான அளவில் அமையும்வண்ணம், தேர்தல் நடைபெறும் மாநிலம் பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்படும்.

2. **வாக்குப்பதிவு** (Ballot):- வாக்குச்சீட்டு மூலம் இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசுத் தலைவர் தேர்தலில் இரகசிய வாக்களிப்பு முறை அல்லது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலம் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத் தேர்தல்களில் வாக்களிக்கும் முறை.

3. **வாக்குப் பதிவுப் பெட்டி** (Ballot Box) :– வாக்காளர் தாம் வாக்களித்த வாக்குச்சீட்டினை செலுத்தும் முத்திரையிடப்பட்டு மூடப்பட்டுள்ள பெட்டி

4. **வாக்குச்சீட்டு** (Ballot Paper):- ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல் அடங்கியுள்ள காகிதச் சீட்டு. இச்சீட்டில், வாக்காளர் தாம் விரும்பிய வேட்பாளரின் பெயரின் எதிரே ✓ குறியிட்டு அதனை வாக்குப்பதிவுப் பெட்டியில் இடுவர்.

5. **வாக்குச்சாவடி நிலை அலுவலர்** (Booth Level Officer(BLO))–மாநில அரசின் அலுவலரான இவர், தனது பகுதியின் வாக்காளராகவும் அப்பகுதியிலுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் நன்கு தெரிந்தவராகவும் இருப்பார். இவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் உள்ள வாக்காளர்களின் விவரங்களைச் சேகரித்தல், சரி பார்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகளை வாக்காளர் பதிவு அலுவலரின் மேற்பார்வையில் செய்கிறார்.

6. **பரப்புரை** (Campaign)–அரசியல்வாதி அல்லது அரசியல் கட்சிகள் தங்களுக்கு வாக்களிக்க, மக்களிடம் செய்யும் முயற்சி.

7. **வேட்பாளர்** (Candidate)–தேர்தலில் போட்டியிடும் நபரே வேட்பாளர் எனப்படுவர்.

8. **தலைமைத் தேர்தல் அதிகாரி** (Chief Electoral Officer (CEO):– ஒரு மாநிலத்தில் நடைபெறும் தேர்தலையும், அதனையொட்டிய பணிகளையும் மேற்பார்வையிட, வழிநடத்த மற்றும் கட்டுப்படுத்துவதற்கு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட ஓர் அரசு அதிகாரி. மேலும் இவர், ஒரு மாநிலத்தின் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் போன்ற பணிகளையும் மேற்பார்வையிடுவார்.

9. **தொகுதி** (Constituency):– தொகுதி வாக்காளர்களால் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் பகுதியாகும்.

10. **மாவட்டத் தேர்தல் அலுவலர்** (District Election Officer(DEO)):– இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு மாவட்ட நிர்வாகத்தின் தலைமையை (மாவட்ட ஆட்சியர், துணை ஆணையர் அல்லது மாவட்ட நீதிபதி) மாவட்டத் தேர்தல் அலுவலராக நியமிக்கிறது. மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியின் வழிகாட்டுதலுக்கு இணங்க, இவர் நாடாளுமன்றம், சட்டமன்றம் மற்றும் மேலவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் திருத்தம் தொடர்பான பணிகளை தனது சட்ட அதிகாரத்திற்குட்பட்ட மாவட்டத்தில் மேற்கொள்வார். தேர்தல் காலங்களில் வாக்குச்சாவடிகளை அமைத்தல், வாக்குச்சாவடி பட்டியல்களை வெளியிடுதல் மற்றும் ஊழியர்களை நியமித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்வார்.



செய்து கீழ்க்கண்டவற்றை வினவலாம்):-


- இன்று நீங்கள் கற்றுக் கொண்ட மூன்று செயல்பாடுகள்
- மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய இரண்டு செயல்பாடுகள்
- எந்த ஒரு செயல்பாடு குறித்து அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (மாணவர்கள், செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்)

### 12. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அணுகுமுறை:-

தேர்தல் கல்வியறிவுக் குழுவில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களும் பங்கு பெற முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

- மாற்றுத்திறனாளி மாணவர்கள் இதில் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், பிற மாணவர்களை இது தொடர்பாக தெரிந்து கொள்ள ஊக்கப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.
- இக்குழு நடைபெறும் இடத்திற்குச் செல்ல அவர்களுக்கு ஏதுவாக வழிவகை செய்ய வேண்டும்.
- கேட்கும் குறைபாடு உள்ள மாணவர் இவ்வகுப்பில் கலந்துகொள்வார் எனில் சைகை மொழி பெயர்ப்பாளர் உடன் இருத்தல் வேண்டும் (அம்மொழி பெயர்ப்பாளர் மாணவரின் நண்பனாகவோ, தெரிந்தவராகவோ இருக்கலாம்).
- இக்குழுவின் அனைத்து செயல்பாடுகளிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் விடுபடா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## 13. அறிவுரைகளுடன் கூடிய செயல்பாடுகள்



# செயல்பாடு: குடியரசுச் சுவருக்குப் பங்களித்தல்-சுவர் இதழ்

## கண்ணோட்டம்

சுவர் இதழ் ஒன்றை உருவாக்குவதற்கான சிந்தனையின் பின்னணி என்பது, தேர்தல் கல்வியறிவு குறித்த தகவல்களை உற்சாகமூட்டுவதாக, ஆக்கபூர்வமானதாக, அனைவரையும் ஈடுபடுத்தக் கூடியதாக, அனைத்து மாணவர்களையும் பங்கேற்கச் செய்யக் கூடியதாக உருவாக்கவும் பகிரவும் உருவானதாகும்.

இந்நோக்கத்திற்காக, பள்ளியின் முக்கியமான பகுதியில் இருக்கும் **சுவர்** பயன்படுத்தப்படும். இது, **'குடியரசுச்சுவர்'** என அழைக்கப்படும். தேர்தல் கல்வியறிவு தொடர்பான பல்வேறு கருத்துகளை அச்சுவரில் ஒட்டியோ அல்லது குண்டூசியால் குத்தியோ அல்லது அனுமதிக்கப்படும் நேர்வில் வரைந்தோ கூட காட்சிக்கு வைக்கலாம்.

சுவர் இதழை, ஒன்பதாம் வகுப்பு தேர்தல் கல்வியறிவுக் குழு நிர்வகிக்க வேண்டும். பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் தங்களின் கருத்துகளை அளித்து சுவர் இதழுக்குரிய பங்களிப்பை நல்கலாம்.

மாணவர்கள் பங்களிப்பைப் பொறுத்து, வாரந்தோறும் அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை சுவர் இதழின் மையக்கருத்தை மாற்றலாம்.

சுவர் இதழுக்கான கருப்பொருட்களை உருவாக்க, ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு ஏனைய வகுப்பு மாணவர்கள் உதவலாம்.

## சுவர் இதழுக்கானமையக்கருத்துகள்

சுவர் இதழுக்கான மையக் கருத்துகள் பின்வருவன:-

1. குடியரசு: மக்களின் அரசு, மக்களால், மக்களுக்காக.
2. எனது வாக்கு எனது உரிமை.
    - என்னுடைய வாக்கின் மதிப்பு
3. தேர்தலுக்குட்பட்ட வாக்குகள் அனைத்தும் எண்ணிக்கைக்குரியதே.
4. வாக்காளராகப் பதிவு செய்தல்
    - 18 ஆண்டுகள்-தகுதியான வயது
    - வாக்காளர் பட்டியல்
5. வாக்காளர் அடையாள அட்டை / என்னுடைய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை
6. தேர்தலில் யாரெல்லாம் போட்டியிடலாம் ?
    - தேவையான தகுதி
    - வேட்பாளராவதற்கான படிநிலைகள்





**நோட்டா** (NOTA)

மாண்பமை உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு மற்றும் ஆணைக்கிணங்க, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் / வாக்குச் சீட்டுகளில் நோடா (NOTA) தேர்வுரிமை குறித்து பின்வரும் அறிவுரைகளை இந்தியத் தேர்தல் ஆணையம் வழங்குகிறது :-

தேர்தல் களத்தில் போட்டியிடும் யாதொரு வேட்பாளருக்கும் வாக்களிக்க விரும்பாத வாக்காளர்களுக்காக, வாக்குச் சீட்டின் இறுதி வேட்பாளரின் பெயர் மற்றும் விவரங்கள் அடங்கிய பகுதிக்குப் பின்னர், மேற்சொன்ன இறுதிப் பகுதிக்குக் கீழே "None of the Above" என்ற வார்த்தைகளில் எழுதப்பட்டிருக்கும் பகுதி ஒன்று அமைக்கப்பட வேண்டும். வாக்குச் சீட்டில், நோட்டா என்னும் தேர்வுக்கு நேராக அதன் சின்னம் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

இச்சொற்கள் வேட்பாளர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும் மொழி / மொழிகள் மற்றும் அளவுகளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

வாக்களிக்கும் இயந்திரத்தில் பதினாறு வேட்பாளர்கள் இருக்கும் நேர்வில், முதல் வாக்குச் சீட்டுப் பகுதியில் "None of the Above" என்னும் தேர்விற்காக கூடுதல் வாக்குப் பதிவுப் பகுதி ஒன்று இணைக்கப்பட வேண்டும்.

வாக்களிக்கும் சாதனம் ஒன்றிற்கு மேல் பயன்படுத்தப்படும் நேர்வில், "None of the Above" என்னும் தேர்வு, இறுதியாக இணைக்கப்படும் வாக்களிக்கும் சாதனத்தில், இறுதி வேட்பாளருக்கான இடத்திற்குக் கீழே அமைக்கப்பட வேண்டும்.







4. வேட்பாளர்களின் பெயர் வரிசை அமைக்கப்படும்பொழுது மக்களவைத் தொகுதி தேர்தல் குறித்த நேர்வில் தேவநாகிரி வடிவெழுத்துக்களிலும், மாநில சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த நேர்வில் தொடர்புடைய மாநிலத்தின் ஆட்சி மொழியிலும் அமைக்கப்பட வேண்டும்.

5. 1961 ஆம் ஆண்டின் தேர்தல் நடத்தும் விதிகளின் 22(3) மற்றும் 30(3)-விதிகளின்படி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் ஒரே பெயரைக் கொண்டிருந்தால், அவர்களின் பெயர்களுடன் அவருடைய தொழில், தங்குமிடம் அல்லது வேறு வகையில் குறிப்பிட்டு வேறுபடுத்திக்கொள்ளலாம். அதுபோன்ற நிகழ்வுகளில், அந்த வேட்பாளர்களின் பெயர்கள் செல்லத்தக்க வேட்புமனு செய்த வேட்பாளர்கள் மற்றும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் மற்றும் வாக்குச் சீட்டில் அதே வகைப்பாட்டின் கீழ் வருமாயின், வேட்பாளர்களின் பெயர்களை ஏதேனும் ஒரு வகையில் வேறுபடுத்திக் காட்டலாம்.

6. வேட்பாளர் ஒருவரின் பெயருடன் யாதொரு அடைமொழி, கல்வி, மரபு வழி, தொழில் அல்லது ஏனைய ஏதேனும் ஒரு பெயரையும் சேர்த்து எழுதுவதற்கு எவ்விதத் தடையும் இல்லை. ஆனால், யாதொரு சூழலிலும், ஏற்கத்தக்க வேட்புமனு செய்த வேட்பாளர்கள் அல்லது போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல்களில் அல்லது வாக்குச் சீட்டுகளில் அகர வரிசையில் பெயர்களை நிரல்படுத்துவதற்கு அத்தகைய பெயர் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

**வாக்குப் பதிவு இயந்திரங்களில் வைக்கப்படும் வாக்குச் சீட்டுகள்**

i. போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை பதினாறுக்கு (நோடாவின் வருகைக்குப் பின்னர் தற்போது பதினைந்து) மிகையாக இருப்பின், வேட்பாளர்களின் எண்ணிக்கை பதினேழு முதல் முப்பத்து இரண்டிற்குள் (தற்போது 31) இருக்கும் நேர்வில் வாக்குச் சீட்டானது பரிந்துரைக்கப்பட்ட அளவில் இரண்டு தாள்களிலும், வேட்பாளர்களின் எண்ணிக்கை முப்பத்து மூன்று முதல் நாற்பத்து எட்டிற்குள் (48) இருக்கும் நேர்வில் மூன்று தாள்களிலும், அவர்களின் எண்ணிக்கை நாற்பத்து ஒன்பதிலிருந்து அறுபத்து மூன்றுக்குள் (63) இருக்கும் நேர்வில் நான்கு தாள்களிலும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

ii. மேற்கூறிய நேர்வுகளில், தொடர் எண் 17 முதல் 32 வரை உள்ள போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் இரண்டாவது தாளிலும், தொடர் எண் 33 முதல் 48 வரை உள்ள பெயர்கள் மூன்றாவது தாளிலும், 49 முதல் உள்ள பெயர்கள் நான்காவது தாளிலும் அச்சிடப்பட வேண்டும். வேட்பாளர்களின் எண்ணிக்கை முப்பத்து இரண்டிற்குக் குறைவாக இருப்பின், இரண்டாம் தாளில், பெயர்ப் பட்டியலுக்குக் கீழ் இடம் வெறுமையாக விடப்பட வேண்டும். வாக்குச் சீட்டுகளின் மூன்றாவது மற்றும் நான்காவது தாள்களுக்கும் அதைப் போல் செய்ய வேண்டும்.

iii. அத்தகைய ஒவ்வொரு தாளிலும், தேர்தலின் விவரங்களைக் குறிப்பிடுவதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் இடத்தில், தடித்த சொற்கள் மற்றும் எழுத்துகளில் அதன் எண் குறிப்பிடப்பட வேண்டும், எ.கா. 'தாள் எண். 1', 'தாள் எண். 2' என இருத்தல் வேண்டும்.

iv. போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள், அவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கும் அதே மொழியில் அச்சிடப்பட வேண்டும். வேட்பாளரின் தொடர் எண், பன்னாட்டு முறையோடு இந்திய எண்களில் குறிப்பிடப்பட வேண்டும்.

v. வாக்குப் பதிவு இயந்திரத்தில் வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தின் இடது புறத்தில் அவரின் தொடர் எண் மற்றும் பெயரும், வலது புறத்தில் அவரின் சின்னமும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.





7. நேர்மையான மற்றும் தெளிவான வாக்களிப்பு

- தேர்தல் பரப்புரையில் செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்
- தேர்தல் நடத்தை விதிகள் : வேட்பாளரின் தவறான செயல்பாடுகள் குறித்து யாரிடம் புகாரளிப்பது ?

8. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine(EVM)) மற்றும் வாக்காளர்தாம் அளித்தவாக்கினை உறுதி செய்யும் கருவியைக் (Voter Verifiable Paper Audit Trail (VVPAT))

- இரகசிய வாக்களிப்பு
- மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் / வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி வாயிலாக செயல்படுத்தப்படும் தேர்தல் முறைகளின் மீதான நம்பகத்தன்மை

9. இவர்களில் எவருமில்லை (None of the above (NOTA))

- நோட்டாவை எப்பொழுதெல்லாம் உபயோகிக்கலாம்.
- உங்கள் வேட்பாளரைக் குறித்த முக்கிய தகவல்களை அறிந்திருத்தல்.

10. இந்தியத் தேர்தல் ஆணையம்-எதிர்- மாநில தேர்தல் ஆணையம் / தேசிய வாக்காளர் தினம்





## செயல்பாடு: நிர்வசித்ரா-படம் திரையிடல் / திருப்புத்தாள் காட்சிக்கு வைத்தல்

### கண்ணோட்டம்:

இச்செயல்பாடு, தேர்தல் செயல்முறை மற்றும் நடைமுறைகளை, ஆர்வமூட்டும் வகையிலான திரைப்படம் / திருப்புத்தாள்(Flip chart) திரையிடுவதன் வாயிலாகவும், நகைச்சுவை நிகழ்ச்சிகளின் மூலமாகவும் தகவல்களைப் பரப்பும் வகையில் அறிமுகப்படுத்துகிறது.

**குறிப்பு:** இச்செயல்பாடு 11-ஆம் வகுப்பு தேர்தல் கல்வியறிவுக் குழு உறுப்பினர்களுக்கு மட்டுமே நடத்தப்படும்.

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, மாணவர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i. வாக்காளராவதற்குத் தகுதியான வயது 18 ஆகும்.

ii. வாக்காளராகப் பதிவு செய்யும் நடைமுறைகளையும், படிவங்களையும் அறிதல்.

iii. வாக்கின் மதிப்பை அறிதல்

iv. தேர்தல் நடைமுறைகளில் வாக்குச்சாவடி நிலை அலுவலரின்(Booth Level Officer (BLO)) பங்கினை அறிதல்-வாக்காளரின் முதல் தொடர்பாளர் மற்றும் வழிகாட்டி







### வாக்குச்சீட்டு மற்றும் நோட்டாவைப் பற்றிய முக்கிய குறிப்புகள்:

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில் உள்ள அதே வரிசைப்படியே வாக்குச் சீட்டிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

**தேர்தல் நடத்தும் அலுவலரின் கையேட்டிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி:**

**செல்லத்தக்க வேட்புமனுக்களை தாக்கல் செய்த வேட்பாளர்களின் பெயர்களை அகர வரிசைப்படி ஒழுங்கமைத்தல்**

1) 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 38 மற்றும் படிவம் 4 (செல்லத்தக்க வேட்பு மனுக்களை செய்த வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல்) மற்றும் படிவம் 7ஏ (தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல்) ஆகியவற்றின்படி, வேட்பாளர்களின் பெயர்கள் மூன்று வகைப்பாட்டின்கீழ் அமைக்கப்படவுள்ளன. அவை வருமாறு:–

அ) தேர்தல் நடைபெறும் மாநிலத்திலுள்ள தேசியக் கட்சி மற்றும் மாநிலக் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள்

ஆ) பதிவு பெற்ற அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி வேட்பாளர்கள் மற்றும்

இ) ஏனைய (சுயேட்சை) வேட்பாளர்கள்.

எனவே, வேட்பாளர்களின் பெயர்கள் மேற்சொன்ன பட்டியலில் அமைந்துள்ள அதே வரிசையில் வாக்குச்சீட்டில் அமைத்திட வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வகைப்பாடுகளிலும் ஒவ்வொன்றிலும் தனித்தனியாக அகர வரிசைப்படி பெயர்கள் அமைக்கப்படவேண்டும்.

(எனினும் படிவங்கள் 4 மற்றும் 7ஏ ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தலைப்புகள் மேலே குறிப்பிட்ட மூன்று வகைப்பாடுகளிலும் வாக்குச் சீட்டுகளில் இடம் பெறக்கூடாது.)

2. வேட்பாளர்களின் பெயர் முறையாக உள்ளதா அல்லது குடும்பப் பெயர் அளிக்கப்பட்டுள்ளதா ? என்பதைப் பொருட்படுத்தாமல் அவரது பெயரின் முதல் எழுத்தின் அடிப்படையில், 3 பட்டியலிலும் அதாவது, செல்லத்தக்க, வேட்புமனு செய்த வேட்பாளர்களின் பட்டியல், (படிவம் 4) தேர்தலில் போட்டியிடுகிற வேட்பாளர்களின் பட்டியல் (படிவம் 7A) மற்றும் வாக்குச்சீட்டுகள் ஆகிய 3 வகைப்பாடுகளிலும் வேட்பாளர்களின் பெயர்கள் அகர வரிசைப்படி அமைக்கப்படுவதை நீங்கள் தீர்மானிப்பீர்கள். வேட்பாளரின் பெயருக்கு முன்னால் தலைப்பெழுத்துகள் ஏதேனும் இருப்பின், மேற்சொன்ன செயல்நோக்கத்திற்காக, பொருட்படுத்த வேண்டாம். எடுத்துக்காட்டாக, வேட்பாளரின் பெயர் T.K.Reddy என்றிருந்தால் அவரது பெயரின் முதல் எழுத்தான 'R' என்ற எழுத்தின்படி தீர்மானிக்கப்படுமேயன்றி, 'T' என்ற எழுத்து அல்ல.

3. எனினும், இரண்டு வேட்பாளர்கள் ஒரே பெயரைக் கொண்டிருந்து வெவ்வேறு தலைப்பெழுத்துகள் இருப்பின், எடுத்துக்காட்டாக P.S.Reddy மற்றும் T.K.Reddy என்றிருந்தால் தலைப்பெழுத்துகளின் முதலெழுத்து அடிப்படையில், அமைத்துக் கொள்ளப்படும். மேலும், இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் ஒரே பெயரைக் கொண்டிருந்து வெவ்வேறு குடும்பப் பெயர்கள் இருப்பின், அவர்களது பெயர்கள், குடும்பப் பெயர்களின் அடிப்படையில், அகர வரிசைப்படி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

| கட்சி / சுயேட்சை | சின்னங்கள் |
|---|---|
| தேசியக் கட்சிகள் (அங்கீகரிக்கப்பட்டவை) | d |
| | [k |
| | x |
| | ?k |
| | p |
| மாநிலக் கட்சிகள் (அங்கீகரிக்கப்பட்டவை) | N |
| | t |
| | > |
| | V |
| கட்சிகள் (பதிவு செய்யப்பட்டவை) | B |
| | M |
| | > |
| | < |
| சுயேட்சை | r |
| | Fk |
| | n |





## ஆதாரங்கள்:

i. மஸ்த் தோஸ்தி மட்தன் (உயிர்ப்பூட்டப்பட்ட(animated) குறும்படம்-12 நிமிடங்கள்)

ii. அபய் மற்றும் அபா-சித்திரப் புத்தகம்

iii. லோக்தந்ரா எக்ஸ்பிரஸ்-ஒலி வடிவக் கதை

iv) வாக்காளராகப் பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் தொடர்பான திருப்புத்தாள் காட்சி

குறிப்பு: திரைப்படம் திரையிட இயலாத நேர்வுகளில் சித்திரப் புத்தகம், ஒலிவடிவக் கதை மற்றும் திருப்புத்தாள் காட்சி போன்றவற்றை உபயோகிக்கலாம்.

## தேவையான பொருட்கள்

i. திரை, படக்காட்சி இயந்திரம், மடிக்கணினி மற்றும் ஒலிபெருக்கிகள்

ii. ஒவ்வொரு மாணவருக்கும் குறிப்பேடு மற்றும் பேனா

iii. தடித்த (Chart)தாள் மற்றும் தடித்த வண்ண பேனாக்கள்

**கால அளவு :** 60 நிமிடங்கள்

**கால வரையறை :** ஏப்ரல் முதல் வாரம்

## முறை:

1. படம் திரையிடுவதற்கு / திருப்புத்தாள் காட்சிப்படுத்துதலுக்கு முன்னர், ஒருங்கிணைப்பாளர், வாக்காளர் பதிவு என்னும் தலைப்பு குறித்து மாணவர்களுக்குப் பழக்கப்படுத்தும் நோக்கிலும், மாணவர்களின் எண்ணங்களை சுருக்கமாக அளவிடும் நோக்கிலும், தேர்தல்கள் மற்றும் பங்களிப்பு தொடர்பான ஒரு சிறிய கலந்துரையாடலுக்கு மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.
2. ஒருங்கிணைப்பாளர் பின்வரும் வினாக்களைக் கேட்டு கலந்துரையாடலைத் தொடங்கலாம்:-
   - இந்தியாவின் பிரதம மந்திரி யார் ?
   - அவர் எவ்வாறு பிரதம மந்திரியானார் என்பது உங்களுக்குத் தெரியுமா ?
   - குடியரசு என்றால் என்ன ?
   - குடியரசு ஆட்சி முறை ஏன் புகழ் வாய்ந்ததாக இருக்கிறது ?
   - நம் ஒவ்வொருவரின் குரலையும் கேட்க வைப்பதற்கான வழிமுறை என்ன ? (தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி மூலம்)
   - குடியரசு நாட்டில் நம் பிரதிநிதிகளை எவ்வாறு நாம் தேர்ந்தெடுக்கின்றோம் ? (தேர்தல்கள்)
   - நம் ஒவ்வொருவரின் குரலையும் கேட்க வைப்பதற்கான காரணி எது ? ( ஒரு வாக்கு)
   - தேர்தல்கள் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதுகின்றீர்களா ? உங்கள் வாக்கு ஏன் முக்கியமாகிறது ?





3. இந்தியாவின் இளைய மற்றும் வருங்கால வாக்காளர்களைக் கொண்ட, 14 முதல் 17 வயது வரையுள்ள மாணவர்களிடம், அவர்களுக்கு 18 வயது நிறைவடைந்த பின்னர் ஒவ்வொருவரும் வாக்களிப்பது எவ்வளவு முக்கியமானது என்பது குறித்து ஒருங்கிணைப்பாளர் உரையாற்ற வேண்டும்.

4. வாக்களிக்கத் தயாராக இருக்கிறார்களா எனத் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்களிடம் ஒருங்கிணைப்பாளர் கேட்க வேண்டும்.

5. ஒருங்கிணைப்பாளர் கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டு, படத்தைத் திரையிடலாம் / படம் திரையிட இயலாத நிலையில் திருப்புத்தாள், சித்திரப் புத்தகம் அல்லது ஒலிவடிவக் கதை போன்ற நிகழ்ச்சிகளை நடத்தலாம்.

6. பின்னர், வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து, வகுப்பில் பெரிய அளவிலான விவாதம் நடத்த வேண்டும். மாணவர்கள், தேர்தல் குறித்த தங்களது முதல் நினைவலைகளை, பெற்றோர் / காப்பாளர் / உறவினர் / அண்டை வீட்டினர் என எவரிடமிருந்தேனும் கேட்டறிந்ததை மீண்டும் நினைவுகூரத் தூண்ட வேண்டும்.

7. பின்னர் மாணவர்களுக்கு தடித்ததாள் (Chart) மற்றும் வண்ண எழுதுகோல்களைக் கொடுத்து, அவர்களைப் பொறுத்தவரையில் படத்தின் மிக முக்கியமான, தங்களைக் கவர்ந்த காட்சி குறித்த அல்லது தேர்தல் மற்றும் வாக்களிப்பின் முக்கியத்துவத்தை விளக்கும் **சுவரொட்டி தயாரித்தல்** போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

8. ஒருங்கிணைப்பாளர், வரைபடங்களைச் சேகரித்து அவற்றைப் பாதுகாப்பான இடம் ஒன்றில் வைக்க வேண்டும். வருங்காலங்களிலும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அமைவிடங்களை அலங்கரிக்க அல்லது தேசிய வாக்காளர் தினத்தன்று நடைபெறும் கண்காட்சிக்குப் பயன்படும் என்பதால், வரைபடங்கள் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.


9. **3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்:** தனி நபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு அனைத்து செயல்பாடுகளும் நினைவூட்டல் முறையில் பின்பற்றப்படவேண்டும். ஒருங்கிணைப்பாளர் வெவ்வேறு நபர்களிடம் கீழ்க்கண்டவற்றை வினவலாம்.
   - இன்று நீங்கள் கற்றுக் கொண்ட மூன்று செயல்பாடுகள்
   - மனதில் வைத்து கொள்ள வேண்டிய இரண்டு செயல்பாடுகள்
   - எந்த ஒரு செயல்பாடு பற்றி அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (மாணவர்கள், செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்).





## வாக்குச் சீட்டுத் தயார் செய்தல்

### மாதிரி வாக்குச் சீட்டு








## மாதிரி வாக்குச் சீட்டு

| | | |
|---|---|---|
| 1. | அழகப்பன் |  |
| 2. | உதயணன் |  |
| 3. | கோவலன் |  |
| 4. | சபாபதி |  |
| 5. | சரவணன் |  |
| 6. | சீராளன் |  |
| 7. | தங்கப்பன் |  |
| 8. | தருமன் |  |
| 9. | மனோகர் |  |
| 10. | நோட்டா (None Of The Above) |  |





## செயல்பாடு: அட்டை விளையாட்டு-மக்களின் பிரதிநிதியாதல்

### கண்ணோட்டம்:

இந்த அட்டை விளையாட்டு, அரசியல் வேட்பாளர் ஒருவரின் பார்வையிலிருந்து வேட்பு மனு மற்றும் தேர்தல் செயல்முறை வாயிலாக, விளையாடுபவர்களை பங்குபெறச் செய்கிறது. ஒரே நேரத்தில் 2லிருந்து 6 நபர்கள் இதில் விளையாடலாம்.

### கற்றல் வெளிப்பாடு:

செயல்பாடு முடிந்த பின்பு, மாணவர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

I) வேட்பாளராவதற்கான தகுதி

II) வேட்பு மனு செயல்முறை

III) தேர்தல் நடத்தை விதிகளை அறிதல்

IV) வேட்பாளரின் தகுதியிழப்பு குறித்து அறிதல்

### தகவல் தொகுப்புகள்:

i) அட்டை விளையாட்டுக் கற்றை (Card Game Set)

**கால அளவு :** ( 30 நிமிடங்கள்)

**கால வரையறை :** ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரம்



## செயல்முறை :

1. யாதொரு வசதியும், வழிகாட்டலும் இல்லாமல், மாணவர்களைக் கொண்டு இந்த விளையாட்டு விளையாடலாம்.
2. விளையாட்டுடன் அதன் விவரங்களும் காணப்படுவதால், மாணவர்கள், இந்த விளையாட்டை எந்தவொரு நேரத்திலும் விளையாட முடியும்.
3. விளையாட்டுக்கு முன்னர், ஏற்பாட்டாளர், தேர்தல் வேட்பு மனு மற்றும் தேர்தல் நடைமுறைகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதம் நடத்துவதற்கு அழைப்பு விடுக்கலாம்.
4. பள்ளி மாணவர் மன்றத் தேர்தல்களில் அவர்கள் சேர்க்க விரும்பும் யாதொரு குறிப்பிடப்பட்ட செயல்முறை மற்றும் தகுதிக்கான தேவைகள் குறித்து மாணவர்கள் விவாதிக்கலாம்.
5. **3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல் :** தனி நபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு அனைத்து செயல்பாடுகளும் நினைவூட்டல் முறையில் பின்பற்றப்படவேண்டும். ஒருங்கிணைப்பாளர் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமர்ந்துள்ள மாணவர்களிடம் கீழ்க்கண்டவற்றை வினவலாம்.
    - இன்று நீங்கள் கற்றுக் கொண்ட மூன்று செயல்பாடுகள்
    - மனதில் வைத்து கொள்ள வேண்டிய இரண்டு செயல்பாடுகள்
    - எந்த ஒரு செயல்பாடு பற்றி அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (மாணவர்கள், செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்).





## வரையறுக்கப்பட்ட சின்னங்கள்

| | | |
|---|---|---|
| 1. | விமானம் |  |
| 2. | கூடை |  |
| 3. | கிரிக்கெட் மட்டை |  |
| 4. | கிரிக்கெட் வீரர் |  |
| 5. | கரும்பலகை |  |
| 6. | புத்தகம் |  |
| 7. | பாலம் |  |
| 8. | மேசை விளக்கு |  |
| 9. | வீடு |  |
| 10. | காற்றாடி |  |
| 11. | நோட்டா (None Of The Above) |   |

## அறிவிக்கை

### போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல்

. . . . . . . வகுப்பின் . . . . . பிரிவின். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பதவிக்கான தேர்தல்

| வ.எண். | வேட்பாளர் பெயர் | ஒதுக்கப்பட்ட சின்னம் |
|---|---|---|

நாள்…………………………………..

இடம்…………………………………..

……………………………………………………

(வேட்பாளரின் கையொப்பம்)

(வேட்பாளர்களின் பெயர்கள் அகரவரிசைப்படி அச்சிடப்பட வேண்டும்)





## செயல்பாடு : மாடல் மட்டான்-மாதிரி வாக்குப்பதிவு

### கண்ணோட்டம்:

மாதிரி வாக்குப் பதிவு, பதினொன்றாம் வகுப்பின் ஒவ்வொரு பிரிவிற்கும் நடத்தப்பட வேண்டும். இதன் மூலம் வகுப்பின் மாணவத் தலைவர் அல்லது வேறு பதவிக்கு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கலாம்.

ஒருங்கிணைப்பாளர் இம்மாதிரித் தேர்தலை பதினொன்றாம் வகுப்பின் ஒரு பிரிவு அல்லது அவ்வகுப்பின் அனைத்து பிரிவுகளிலும் நடத்துவார்.

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, மாணவர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i. தேர்தல் நடைமுறைகளைத் தெரிந்து கொள்ளுதல்

ii. வாக்களிப்பதில் இரகசியம் காத்தல்

iii. வாக்குகள் எவ்வாறு எண்ணப்படுகிறது என்பன குறித்து அறிந்து கொள்ளுதல்



## ஆதாரங்கள்:

- வாக்காளராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் (பக்கம் 37)
- வாக்காளர் பட்டியல் படிவம் (பக்கம் 38 )
- வேட்புமனு படிவம் (பக்கம் 39 )
- வேட்பாளர் பட்டியலின் அறிவிக்கை (பக்கம் 43 )
- தேர்தல் சின்னங்களின் பட்டியல் (பக்கம் 44 )
- வாக்குச் சீட்டின் மாதிரிப் படிவம் (பக்கம் 45 )

**தேவையானபொருட்கள்**

i. வாக்குப் பெட்டி -அட்டைப் பெட்டியினைப் பயன்படுத்தலாம்.

ii. மூடும் திரைகள்-அட்டைப் பலகைகளைத் திரையாகப் பயன்படுத்தலாம்.

**கால அளவு :** 30 நிமிடங்கள்

**கால வரையறை :** ஏப்ரல் மாதத்தின் இறுதியில்

## அமர்வு 1 :-

### I. மாணவர்களுக்கு கதாபாத்திரம் வழங்குதல்

i) இம்மாதிரி தேர்தலில், மாணவர்கள் ஏற்க வேண்டிய பின்வரும் கதாபாத்திரங்களை ஒருங்கிணைப்பாளர் கரும்பலகையில் எழுதுவார்.

a) தேர்தல் நடத்தும் அலுவலர்- I.(Returning Officer)

(இவர் வேட்புமனு படிவம் பெறுதல், வாக்குச்சீட்டினைத் தயாரித்தல், தேர்தல் நடத்துதல், வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவுகளை அறிவித்தல் போன்ற நிகழ்வுகளுக்குப் பொறுப்பாவார். வாக்குச்சாவடி தலைமை அலுவலர் (Presiding Officer) மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள்(Polling Officer) இவருக்கு உதவுவர் )

b) வாக்குச்சாவடி தலைமை அலுவலர் - I. (Presiding Officer)

(வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கையினை மேற்பார்வையிடுவார். மேலும் வாக்குப்பதிவு அலுவலர்கள் இவருக்கு உதவுவர்)

c) வாக்குப் பதிவு அலுவலர்கள் ( Polling Officers) நிலை-3

d) வாக்காளர் பதிவு அலுவலர் ( Electoral Registration Officer) நிலை-1

(மாணவர்களை வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்வது மற்றும் வாக்காளர் பட்டியல் வெளியீடு போன்றவற்றிற்கு பொறுப்பாவார். வாக்குச் சாவடி நிலை அலுவலர் இவருக்கு உதவுவார்.)





## பகுதி–III

**(தேர்தல் நடத்தும் அலுவலர் பூர்த்தி செய்ய வேண்டியது)**

வேட்புமனுவின் தொடர் எண்....................

இந்த வேட்புமனு என்னுடைய அலுவலகத்தில் ..........................தேதியன்று ...........மணிக்கு *வேட்பாளரால் / முன்மொழிபவரால் என்னிடம் ஒப்புவிக்கப்பட்டது. (முன் மொழிபவரின் பெயர்.......................................)

நாள்........................... ........................................ தேர்தல் நடத்தும் அலுவலர்

* பொருந்தாத சொல்லை அடித்து விடவும்.

## பகுதி-IV

(தேர்தல் நடத்தும் அலுவலர் பூர்த்தி செய்ய வேண்டியது)

**வேட்புமனுவை ஏற்றோ அல்லது நிராகரித்தோ தேர்தல் நடத்தும் அலுவலர் எடுக்கும் முடிவு**

வேட்புமனுப் படிவம் 1-ல் குறிப்பிட்டுள்ள பதவிக்கான தேர்தலுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி நான் இந்த வேட்புமனுவைப் பரிசீலித்துக் கீழ்க்கண்டவாறு முடிவு செய்கிறேன்:-

வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்டது / நிராகரிக்கப்பட்டது...............................

வேட்புமனு நிராகரிக்கப்பட்டதற்கான காரணம்... ............... ............... ...... ...................... ............... ............... ...............,............. ............... ...............,.............. ..............,.............. ...... ...................... ............... ...........

நாள்............................. ........................................ தேர்தல் நடத்தும் அலுவலர்

........................................................................

வேட்பாளரின் / முன்மொழிபவரின் மேலொப்பம்



## பகுதி-II

**(வேட்பாளர் நிரப்ப வேண்டியவை)**

பகுதி-I-இல் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளராகிய................................... (முழு பெயர்) நான் இந்த நியமனத்திற்கு இசைவளித்துப் பின்வரும் உறுதியை இதனால் அளிக்கிறேன்:-

- நான் .......................................................... பள்ளியின்
- ..... வகுப்பின் ..... பிரிவின் மாணவன் / மாணவி.
- எனது பெயர் வாக்காளர் பட்டியலில் வ.எண்............... -ல் உள்ளது.
- மேலே குறிப்பிட்ட பள்ளியில் நடத்தப்படும் ............................................ பதவிக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின்படி நான் தகுதியுடையவனாவேன் என்பதோடு தகுதியின்மை ஏதும் அற்றவனாக உள்ளேன்.
- எனது விவரங்கள் அனைத்தும் பகுதி-1 படிவத்தில் மிகச் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் எனக்கு வரையறுக்கப்பட்ட சின்னங்கள் அடங்கிய பட்டியலிலிருந்து பின்வரும் முன்னுரிமை வரிசைப்படி சின்னங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்:-

(1), ................................

(2), ................................

(3),...............................

நாள்.................................... ..........................................................

(வேட்பாளரின் கையொப்பம்)

இடம்....................................

e) வாக்குச்சாவடி நிலை அலுவலர் (Booth Level Officer) – 2 / 4

(ஒரு வகுப்புக் குழுவிற்கு ஒருவர் இருப்பார். இவர் வாக்காளர் பட்டியலில் பதிவதற்கான படிவங்களை குழுவின் மாணவர்களுக்கு வழங்கி அவர்களின் விவரங்களைப் பெறுவார். மேலும் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு(Returning Officer) வாக்குச் சீட்டினைத் தயாரிக்க உதவுவார்.)

f) வாக்காளர்கள்

g) போட்டியிடும் வேட்பாளர்கள்

(தேர்தலில் போட்டியிடுதல் மற்றும் அதற்காகப் பரப்புரை செய்தல்)

**வேட்பாளரின் தகுதிக் கூறுகள்:-**

- ✓ தனது வகுப்பில் தேர்தல் கல்வியறிவுக் குழுவில் வாக்காளராகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
- ✓ வேட்புமனு தாக்கல் செய்யும்போது வேட்பாளருக்கு குறைந்தது 3 நபர்கள் முன்மொழிய வேண்டும்.
- ✓ ஒருங்கிணைப்பாளர் /ஆசிரியரால் வேட்பாளர்கள் பரிந்துரைக்க வேண்டும்.

ii) மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப மேற்கூறிய கதாபாத்திரங்களைத் தாமே முன் வந்து தேர்வு செய்யலாம். மாணவர்களின் செயல்களை ஒருங்கிணைப்பாளர் ஒருங்கிணைக்க வேண்டும். வரிசை எண். A முதல் F வரையுள்ள கதாபாத்திரங்களை ஏற்ற மாணவர்கள் தங்களது பதவிக்கான பொறுப்புகளை இப்புத்தகத்தின் 14-ம் பிரிவில் (பக்கம் 34) விளக்கப்பட்டுள்ள பொருள்களிலிருந்தும், படிவங்களிலிருந்தும் மற்றும் சொல் விளக்கத்திலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

iii) பின்னர் ஒருங்கிணைப்பாளர் கதாபாத்திரங்களை ஏற்ற மாணவர்களைத் தங்களது பதவி மற்றும் பொறுப்பு குறித்து மொத்த வகுப்பறை முன்பு விளக்கமளிக்கச் செய்ய வேண்டும்.


### II) தயாராதல்

(i) வாக்காளர் பதிவு அலுவலர் (ERO) வாக்குச்சாவடி நிலை அலுவலருடன்(BLO) இணைந்து தகவல் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளபடி வாக்காளர் பட்டியலில் பெயர் **பதிவதற்கான படிவங்களைத்** தயாரிக்க வேண்டும்.

(ii) தேர்தல் நடத்தும் அலுவலர் (RO) வேட்பு மனு படிவங்களைத் தேவையான அளவு தயாரித்து வேட்பாளர்களுக்கு வழங்க வேண்டும்.

(iii) இதனிடையே வாக்குச்சாவடி தலைமை அலுவலர் (PrO) வாக்குப்பதிவு அலுவலர்கள்(POs) ஒட்டுப் பெட்டியினைத் தயாரித்து அடுத்தப் பக்கத்தில் காண்பித்தவாறு **வாக்குச்சாவடி மையங்களை** அமைப்பர்.





(iv) இரகசிய வாக்களிப்பினை உறுதி செய்யும் வகையில் வாக்களிக்கும் பெட்டியைத் திரை கொண்டு மறைக்க வேண்டும்.

(v) வாக்காளர்கள், தேர்தல் விழிப்புணர்வு தொடர்பாக சுவரொட்டிகள், கொள்கை வாக்கியங்கள் போன்றவற்றை வரையலாம்.

(vi) ஒருங்கிணைப்பாளர், தேர்தல் பரப்புரை மற்றும் வாக்குப் பதிவிற்காக இரு வெவ்வேறு அறைகளை ஒதுக்க வேண்டும். அல்லது ஒரே அறையினைப் பிரித்து, இவ்விரு செயல்களுக்காக உபயோகிக்கலாம்.

## அமர்வு. 2 :

மேற்குறிப்பிட்ட தேர்தல் முன்னேற்பாட்டினைத் தொடர்ந்து வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்தல், வேட்புமனு செய்தல், பரப்புரை மற்றும் வாக்களிப்பு நடைபெறும். இந்நிகழ்வுகள் ஒருங்கிணைப்பாளரால் மேற்பார்வையிடப்படும். ஆனால், தேர்தல் அலுவலர்களாகப் பொறுப்பு வகிக்கும் மாணவர்களால் கீழ்க்கண்டவை நடைமுறைப்படுத்தப்படும்.

### I. வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்தல்:–

i) வாக்குச்சாவடி நிலை அலுவலர், விண்ணப்பங்களை மாணவர்களுக்கு வழங்கி அவர்களின் விவரங்களைப் பெற வேண்டும்.



வேட்பு மனு தொடர் எண்.. . . . . . . . . . . (தேர்தல் நடத்தும் அலுவலரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்)

## வேட்புமனுப் படிவம்

. ....................................................................................................

பள்ளியிலிருந்து, . . . . . . . வகுப்பின் . . . . . பிரிவின். . . . . . .. . . . . . . . . பதவிக்கான தேர்தல்.

**பகுதி–1**

**(வேட்பாளரை முன்மொழிபவர்கள் பூர்த்தி செய்ய வேண்டியது)**

. . . . . . . வகுப்பின் . . . . . பிரிவின். . . . . . .. . . . . . . . . பதவிக்கான தேர்தலுக்குரிய வேட்பாளராக கீழ்க்கண்ட நபரை நாங்கள் முன் மொழிகிறோம்.

- வேட்பாளரின் பெயர் ..............................................................
- தந்தை/தாய்/கணவர் பெயர் ...................................

அவருடைய பெயர்..........................................வகுப்பின்.......................... பிரிவின்..........................வாக்காளர் பட்டியலின்......................................................... ..........................ஆம் எண்ணுள்ள பாகத்தில்..................... ஆம் தொடர் எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

............................................................................................

பள்ளியிலிருந்து, . . . . . . . வகுப்பின் . . . . . பிரிவின். . . . . . .. . . . . . . . . பதவிக்கான தேர்தல்.. . . .. நாங்கள் . . . . . . . வகுப்பின் . . . . . பிரிவின். . . . . . .. . . . . . . . . வாக்காளர்கள் என்றும், எங்களுடைய பெயர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும், இந்த நியமனத்தை முன்மொழிவதற்கு அடையாளமாக, இதில் எங்களின் கையொப்பங்களைக் கீழே இட்டுள்ளோம் என்றும் இதனால் அறிவிக்கின்றோம்.

**முன்மொழிபவர்களின் விவரங்களும் அவர்களுடைய கையொப்பங்களும்**

| வ. எண் | முன் மொழிபவரின் பெயர் | வகுப்பில் மாணவரின் வ.எண். | வாக்காளர் பட்டியலில் வ.எண். | கையொப்பம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**பின் குறிப்பு:– ஒரு வேட்புமனு செய்ய குறைந்தபட்சம் மூன்று வாக்காளர்கள் முன்மொழிபவர்களாக இருக்க வேண்டும்.**



## படிவங்கள்

### வாக்காளர் பெயர் சேர்த்தல் படிவம்

(பெயர் பதிவு செய்வதற்கான படிவம்)

பெயர் ..............................................................................................................

வயது ..............................................................................................................

பாலினம் ..............................................................................................................

பிறந்த தேதி ..............................................................................................................

வகுப்பு ..............................................................................................................

பிரிவு ..............................................................................................................

வகுப்பில்
மாணவரின் வ.எண். ..............................................................................................................

..............................................

கையொப்பம்

### வாக்காளர் பட்டியல் (Electoral Roll)

**தேர்தல் மாவட்டம்**-பள்ளியின் பெயர்

**தொகுதி –** வகுப்பு மற்றும் பிரிவு

**பகுதி –** பிரிவு . . . .

| **வ.எண்.** | **பெயர்** | **பாலினம்** | **வகுப்பில் மாணவரின் வ.எண்.** |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |





ii) வேட்பாளர்கள், தேர்தல் அலுவலர்களாகப் பொறுப்பு வகிக்கும் மாணவர்கள் உட்பட அனைவரும் வாக்காளராகப் பதிவு செய்திருக்க வேண்டும்.

iii) வாக்குச் சாவடி நிலை அலுவலரால் கொடுக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில், வாக்காளர் பதிவு அலுவலர் **வாக்காளர் பட்டியலை வகுப்பு வாரியாக,** இப்புத்தகத்தின் 14-ம் பிரிவில் (பக்கம் 38) தரப்பட்டுள்ள படிவங்களிலிருந்தும் மற்றும் சொல் விளக்கத்திலிருந்தும் வரையறுக்கப்பட்ட வடிவில் தயாரிப்பார்.

(iv) வாக்குச்சாவடி நிலை அலுவலர், வகுப்பின் வாக்காளர் பட்டியலை அறிவிப்புப் பலகையிலோ, சுவரிலோ அனைவருக்கும் தெரியும்படி காட்சிக்கு வைப்பார்.

### II). வேட்புமனு தாக்கல் செய்தல் மற்றும் தேர்தல் சின்னம் ஒதுக்குதல்:

i) ஒவ்வொரு வேட்பாளரும் குறைந்தது 3 வாக்காளர்களை தங்களுக்கு முன்மொழியச் செய்து படிவத்தைப் பூர்த்தி செய்து வேட்புமனு செய்ய வேண்டும் .

ii) வரையறுக்கப்பட்ட சின்னங்களில் இருந்து, 3 சின்னங்களை தெரிவு செய்து வேட்பாளர் தனது வேட்பு மனுவில் முன்னுரிமை வரிசையில் குறிப்பிட வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர் சின்னங்களை ஒதுக்கீடு செய்வார்.

iii) தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்பு மனுவினை ஆராய்ந்து வேட்பாளருக்கான தகுதிகளை சரிபார்ப்பார். உரிய தகுதிகளைக் கொண்டிருக்கும் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

iv) வேட்பாளரின் தகுதியினை உறுதிப்படுத்த அவ்வேட்பாளரின் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என சரிபார்க்க வேண்டும்.

v) வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கும் பொழுது யார் முதலில் வேட்புமனு தாக்கல் செய்கிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஒரு வேளை, ஒரு வேட்பாளர் முதலில் கோரிய சின்னம் வேறொருவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் அவரால் இரண்டாவதாகவோ அல்லது மூன்றாவதாகவோ முன்னுரிமை அளிக்கப்பட்ட சின்னத்தை அவருக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து ஆலோசிக்கப்படும். வேட்பாளர் தேர்வு செய்த 3 சின்னங்களும் வேறு வேட்பாளருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால், ஒதுக்கீடு செய்யப்படாமல் மீதமிருக்கும் சின்னத்தில் இருந்து ஒன்றை வேட்பாளர் தெரிவு செய்து கொள்ளலாம்.

vi) தேர்தல் நடத்தும் அலுவலர், வேட்பாளர்களின் பட்டியலைப் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் தயாரிப்பார். இப்பட்டியலில் வேட்பாளரின் பெயர் அகரவரிசையில் அமைந்திருக்கும்.

vii) வேட்பாளர் பட்டியல் குறித்த அறிவிக்கை சுவரிலோ, அறிவிப்புப் பலகையிலோ காட்சிப்படுத்தப்படும்.





### III) பரப்புரை:

i) தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்பாளர்களின் பரப்புரை குறித்து அனைத்து மாணவர்களின் முன்னிலையில் விளக்குவதோடு கீழ்க்காணும் நெறிமுறைகளைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும்.

- கட்டாயப்படுத்தியோ, அச்சுறுத்தல் மூலமாகவோ, வாக்களிக்கச் செய்வது அனுமதிக்க இயலாது.
- பொதுச்சொத்தை சேதப்படுத்த அனுமதி இல்லை
- இடையூறு மற்றும் தொல்லைகள் – எடுத்துக்காட்டாக, அதிக சத்தத்தில் அறிவிப்பு செய்தல், தவறான நடத்தை மற்றும் சுற்றுப்புறத்தை அசுத்தம் செய்தல் போன்ற செயல்பாடுகளுக்கு அனுமதி கிடையாது
- இலஞ்சம் கொடுக்கக்கூடாது
- பாகுபாடு அடிப்படையில் ஆதரவைப் பெறக்கூடாது
- வாக்காளர்களிடையே தவறான தகவல்களைப் பரப்பக் கூடாது.
- பொது இடங்களில் பிற வேட்பாளர்களை அவமதிக்கும் வகையிலான நிகழ்வுகளை அனுமதிக்க முடியாது.
- தவறான வழிமுறைகளைக் கடைபிடிப்பதைக் கண்டறிந்தால், அவ்வேட்பாளர் தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

ii) அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளர்கள் தன்னை முன்மொழிந்தவர்களுடன் இணைந்து தேர்தல் சின்னத்தை குறித்து பரப்புரை செய்யலாம்.

iii) ஒருங்கிணைப்பாளர் வேட்பாளர்களை ஒவ்வொருவராக அழைத்து தனக்கு வாக்களிக்கக் கோரி வாக்காளர்களிடம் சிற்றுரையாற்றுமாறு அழைக்கலாம்.

### IV) வாக்குச்சாவடி அமைத்தல் மற்றும் வாக்குச்சீட்டு தயாரித்தல்

i) தேர்தல் நடத்தும் அலுவலர் வாக்குச்சீட்டினை வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலரின் உதவியுடன் வடிவமைப்பார்.

ii) வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் சின்னங்கள், மாதிரி வாக்குச்சீட்டில் கொடுத்துள்ளபடி தயாரித்தல் வேண்டும். வாக்குச்சீட்டில் நோட்டா இறுதியாக இருக்க வேண்டும்.

iii) போதுமான அளவு வாக்குச்சீட்டினைத் தயாரிக்க வேண்டும் (ஒளிநகல் எடுக்கப்பட்டது அல்லது வரையப்பட்டது).

iv) இதனிடையே வாக்குச் சாவடி தலைமை அலுவலர் (Presiding officer) & வாக்குப் பதிவு அலுவலர்கள் (Polling Officers) மாதிரி வாக்குச்சாவடியினை அமைத்து வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்குச் சீட்டினை அதற்காக ஒதுக்கப்பட்ட மேசைகளின் மீது வைக்க வேண்டும்.





### தேர்தலுக்கு முந்தைய பரப்புரை பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்:

a) வேட்பாளர்களுக்கு இடையிலான விவாதங்கள்.

b) பள்ளி வளாகத்திற்குள் பரப்புரை சாதனங்களாக விளக்கப்படங்கள், சுவரொட்டிகள், பதாகைகள், மாதிரிகள், நிறுவுகைகளைப் பயன்படுத்துதல்.

c) பிரச்சாரப் படங்கள், பாடல்கள், கொள்கை முழக்கங்கள், ஏனைய ஒலி-ஒளி வடிவங்கள் வளாகத்திற்குள் காட்சிப்படுத்துதல்.

### தேர்தலுக்கு முந்தைய பிரச்சாரத்தில் பின்வருவன மேற்கொள்ளப்படக் கூடாது.

a) வாக்களிப்பதற்கு எந்த வகையிலும் வலுக்கட்டாயப்படுத்துதல் அல்லது அச்சுறுத்துதல்.

b) பள்ளிச்சொத்தினை சிதைத்தல். (எ.கா.பொதுச் சுவரில் எழுதுதல்)

c) பொது மக்களுக்கு குழப்பம் மற்றும் தொல்லை ஏற்படுத்துதல் (எ.கா.ஒலிபெருக்கிகள் மற்றும் ஒளிக்கதிர்களை (LASER) பயன்படுத்துதல்)

d) சமுதாயம், மதம், சாதி, இனம், பாலினம், பொருளாதாரம் மற்றும் நிதி வழிமுறைகள் / பின்னணி சார்ந்த மேற்கோள்கள், சந்தேகக் குறிப்புகள் அல்லது வெளிப்படையான சொற்கூறுகள்

e) வன்முறைகளில் ஈடுபடுதல் அல்லது தூண்டுதல்

f) நடத்தை விதிகளுக்கு உட்படாத கையூட்டு அல்லது நிதி கொடுக்கல் வாங்கல் போன்ற நிகழ்வுகள்

g) தாய் அரசியல் கட்சிகள்/ அமைப்புகளிடமிருந்து பெறப்படுகின்ற ஆதரவு போன்ற நிகழ்வுகள்

h) தேர்தல் நடத்துகின்ற அதிகார மன்றத்தின் உறுப்பினரை தன்வயப்படுத்துவதற்கு ஏதேனும் ஒரு வகையில் முயற்சித்தல்

i) வாக்காளர்களைத் தவறாக வழிநடத்தவும் தவறான தகவல் அளிக்கவும் முயற்சித்தல்

j) வெறுக்கத்தக்க பேச்சினைப் பயன்படுத்துதல், நற்பெயரை பொதுவில் சிதைத்தல் மற்றும் போட்டி வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளுக்கு அவப்பெயர் ஏற்படுத்துதல்.





## C. வாக்காளர் பதிவு அலுவலர் (Election Registration Officer)

வாக்காளர் பதிவு அலுவலர், வாக்குச்சாவடி நிலை அலுவலரின் உதவியுடன் பணிபுரிவார்.

### பொறுப்புகள்

i. வாக்காளர் பெயர் பதிவிற்காக விண்ணப்பங்களைத் தேவையான அளவில் தயாரித்தல்

ii. தனது வகுப்பிற்கான வாக்காளர் பட்டியலை இறுதி செய்தல்

iii. வாக்காளர் பட்டியலின் நகல் ஒன்றை, தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் ஒப்படைத்தல்.

## D. வாக்குச் சாவடி நிலை அலுவலர் (Booth Level Officer)

ஒவ்வொரு வாக்காளர் பதிவு அலுவலருக்கும் வாக்குச் சாவடி நிலை அலுவலர் உதவியாக இருப்பார். ஒரு வகுப்பில் உள்ள ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு வாக்குச்சாவடி நிலை அலுவலர் இருப்பார்.

### பொறுப்புகள்

i) தனது பிரிவில் இருக்கும் மாணவர்களிடமிருந்து, வாக்காளர் பெயர் பட்டியலில் பதிவு செய்ய விண்ணப்பங்களை அளித்து அவர்களின் விவரங்களைப் பெறுதல்.

ii) அவர்கள் பிரிவிற்கான வாக்காளர் பட்டியலைத் தயாரித்தல்

iii) வாக்குப் பதிவு நாளன்று, வாக்குச் சாவடிக்கு வெளியேயிருக்கும் வாக்காளர்களுக்குத் தேவையான தகவலளித்தல் போன்ற உதவிகளைச் செய்தல்

## E. வேட்பாளர்கள்:

i) வேட்பாளராவதற்கான தகுதிகளைப் பெற்றிருக்கிறார்களா என்பதைச் சரிபார்த்தல் வேண்டும். வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்யவில்லை எனில் உடனடியாகப் பதிவு செய்தல் வேண்டும்.

ii) வேட்புமனுவினை செய்வதற்கு குறைந்தது 3 முன்மொழிபவர்கள் தேவை.

iii) வேட்பாளர் தனது வேட்புமனுவினைப் பரிந்துரைக்கப்பட்ட வேட்புமனுப் படிவத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

iv) தேர்தல் நடத்தும் அலுவலரின் முன்பு வேட்புமனுப் படிவத்தில் ஆதரவாளர்கள் கையொப்பமிட வேண்டும்.

v) உங்களது வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், நீங்கள் அதிகாரப்பூர்வ வேட்பாளராக அங்கீகரிக்கப்படுவீர்கள்.

vi) தேர்தல் நடத்தும் அலுவலர் குறிப்பிட்ட அட்டவணையின்படி பரப்புரை செய்தல் வேண்டும்.





v) வாக்குப் பெட்டி காலியாக உள்ளதை உறுப்பினர்கள் அனைவரிடமும் காண்பிக்காமல் மேற்புறத்தை மூடக்கூடாது. வாக்களிக்கும் திரைக்குப் பின்னால் ஒரு பென்சிலை மட்டும் வைத்து விட்டுவர வேண்டும்.

## V) வாக்குப் பதிவிற்கு முன் விளக்கமளித்தல்:

i) வாக்குச் சாவடி தலைமை அலுவலர் தன்னைக் குறித்தும், வாக்குப்பதிவு அலுவலர் குறித்தும் அவர்களின் பணிகள் குறித்தும் வாக்காளர்களுக்கு அறிமுகப்படுத்தி சுருக்கமாக உரையாற்ற வேண்டும்.

ii) வாக்குச் சாவடி தலைமை அலுவலர் அனைத்து தேர்தல் நடவடிக்கைகளையும் கண்காணிப்பார்.

iii) வாக்குச்சாவடியின் முதல் வாக்குப்பதிவு அலுவலர், வாக்காளர் உள்ளே வந்ததும், வாக்காளரின் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதைச் சரிபார்ப்பார். அந்த வாக்காளர் வாக்களித்த பின்னர் அவர் பெயருக்கு எதிரே அவர் வாக்களித்துவிட்டார் என்பதற்காக ஒரு குறியீடு செய்வார்.

iv) இரண்டாவது வாக்குப்பதிவு அலுவலர், வாக்காளரிடம் வாக்களிப்பதற்கான வாக்குச் சீட்டினை வழங்குவார்.

v) மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர், வாக்காளரின் இடது ஆட்காட்டி விரலில் வாக்களித்ததற்கான அடையாள மையினை வைப்பார்.

vi) வாக்களிக்கும் உறுப்பினர்களிடம் வாக்குச்சீட்டை பெட்டியில் இடுவதற்கு முன்னர் வாக்குச்சீட்டில் குறியீடு செய்யவேண்டும் எனவும், அவ்வாறு குறியீடு இல்லையென்றால் அந்த வாக்கு, எண்ணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கவேண்டும்.

vii) வாக்களிக்கும் உறுப்பினர்களிடம், வாக்குச்சீட்டில் உள்ள நபர்களின் பெயருக்கெதிரே ஒரு சரி எனப்படும் (✓) குறியீடு மட்டும் இடப்பட வேண்டும் என்றும், வேறு எந்தக் குறியீடுகளோ அல்லது பெயர் அல்லது எண்கள் போன்ற குறியீடுகள் செய்தால், அந்த வாக்கு நிராகரிக்கப்படும் என்றும் அறிவுறுத்தவேண்டும்.

viii) வாக்குச்சீட்டில் வாக்காளர்கள் தவறுதலாக, எதிர்பாராவண்ணம் ஏதேனும் குறியீடு செய்துவிட்டால், வாக்காளர், அதற்கு பதிலாக வேறு வாக்குச் சீட்டு கோரி வாக்குச்சாவடி தலைமை அலுவலரை அணுகலாம்.

ix) வாக்காளர்கள், வாக்களித்த விவரம் இரகசியமாக காக்கப்பட வேண்டும் என்பது குறித்து ஒருங்கிணைப்பாளர், வலியுறுத்த வேண்டும்.





### VI) வாக்களித்தல்

i. வாக்குப்பதிவுக்கு முன் வாக்குப்பெட்டி காலியாக உள்ளது என்பது அனைவருக்கும் காண்பிக்கப்பட வேண்டும்.

ii. பங்கேற்பாளர்களிடம், ஆண்களையும், பெண்களையும் தனித்தனி வரிசையில் நிற்கச் செய்ய அறிவுறுத்த வேண்டும். அவ்வரிசையில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும், மூத்த குடிமக்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

iii. ஒரு சமயத்தில் வாக்காளர் ஒருவர் மட்டும் முதல் வாக்குப்பதிவு அலுவலரை அணுகி, அவரது பெயர், வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்று சரிபார்க்க வேண்டும். வாக்குச் சீட்டில் குறியீடு செய்வதற்கு முன்னர் இரண்டாவது வாக்குப்பதிவு அலுவலரிடம் வாக்குச்சீட்டினைப் பெற்று, மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலரிடம், அடையாள மை தங்கள் விரலில் வைத்துக்கொள்ளவும் வாக்களிப்போரிடம் அறிவுறுத்த வேண்டும்.

iv. வாக்காளர்கள், வாக்குச்சீட்டினை இரண்டாக மடித்த பின்னர், குறியீடு செய்த தங்களுடைய வாக்குச்சீட்டை வாக்குப்பெட்டியில் போடவேண்டும்.

v. அனைவரும் வாக்களித்தவுடன், ஒருங்கிணைப்பாளர் அனைவரிடமும் வாக்களிப்பின் இரகசியம் காக்கப்படவேண்டும் என்பது குறித்து பேசவேண்டும். அத்துடன், தற்போதைய சட்டமன்றம் மற்றும் மக்களவைக்கான பொதுத் தேர்தல்களில் வாக்குச்சீட்டிற்குப் பதிலாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்தும், அதன் மூலம் எவ்வாறு செம்மையான முறையில் வாக்களிக்க இயலும் என்பது பற்றியும் குறிப்பிட வேண்டும்.

### VII) வாக்கு எண்ணும் பணி

i) வாக்குச் சாவடி தலைமை அலுவலர் (PrO) மற்றும் வாக்குப் பதிவு அலுவலர்களாகச் செயல்பட்ட உறுப்பினர்கள் தேர்தல் நடத்தும் அலுவலரின்(RO) மேற்பார்வையில் வாக்கு எண்ணும் பணியை மேற்கொள்ள வேண்டும்.

ii) ஒவ்வொரு வாக்குச் சீட்டினையும் பிரித்த பிறகு, ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனித்தனியாக குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டுகளை தனித்தனி கட்டுகளாக கட்ட வேண்டும்.

iii) கரும்பலகையை வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். வாக்கு எண்ணும் முகவர் கரும்பலகையின் அருகில் நின்று கொண்டு வேட்பாளர் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையைக் குறிக்க வேண்டும். கரும்பலகை இல்லாத நிலையில், பெரிய காகிதத்தையோ அல்லது அட்டையையோ பயன்படுத்தலாம். இந்த உத்தி, வாக்கு எண்ணிக்கையை அனைவரும் அறிந்துகொள்வதற்குப் பயன்படும்.

iv) மடித்துப் போடப்பட்ட வாக்குகளைப் பிரித்து, பங்கேற்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் காண்பித்து, வாக்களிக்கப்பட்ட வேட்பாளரின் பெயரை அனைவரும் கேட்கும்வண்ணம் படிக்க வேண்டும்.





# 14. செயல்பாடுகளுக்கான தகவல் தொகுப்புகள்

## மாதிரித் தேர்தல்

**பதவி மற்றும் பொறுப்புகள்**

### A. தேர்தல் நடத்தும் அலுவலர்

ஒவ்வொரு பதவிக்கும் ஒரு தேர்தல் நடத்தும் அலுவலர் இருப்பார். அவர் வேட்பு மனுவை ஏற்றுக்கொள்ளுதல், வாக்குச் சீட்டை தயாரித்தல், தேர்தலை நடத்துதல், வாக்கு எண்ணுகை மற்றும் முடிவுகளை அறிவித்தல் போன்ற பணிகளுக்குப் பொறுப்பாவார். இப்பணிகளை மேற்கொள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் உதவிபுரிவர்.

**பொறுப்புகள்**

i) வேட்பாளராக வேட்பு மனு தாக்கல் செய்வதற்காக மாணவர்களை அழைத்தல்

ii) **வேட்பு மனு படிவத்தை** கூர்ந்தாய்வு செய்தல்

iii) வாக்குப் பதிவுக்கான **வேட்பாளர் பட்டியலை இறுதி செய்து அறிக்கை வடிவில்** பகிர்தல்

iv) **வாக்குச்சீட்டை** தயாரித்தல்

v) வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகை அலுவலர்களைப் பணியமர்த்துதல்

vi) வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகையைக் கண்காணித்தல்

### B. வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள்

வாக்குச்சாவடி தலைமை அலுவலர் (Presiding Officer) மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் (Polling Officer) ஒரு வாக்குச்சாவடியின் அனைத்து செயல்பாடுகளையும் மற்றும் வாக்கு எண்ணுகையையும் மேற்பார்வையிடுவார். வாக்குப்பதிவு நாளன்றும் மற்றும் வாக்கு எண்ணிக்கை நாளன்றும் மூன்று வாக்குப்பதிவு அலுவலர்கள் இவருக்கு உதவி செய்வர்.

### பொறுப்புகள்

i) வாக்குப்பதிவிற்கான இடத்தைத் தயார் செய்தல்

ii) தேர்தல் நேரத்தில் வாக்குப்பதிவினை நடத்துதல்

iii) வாக்குப்பதிவு நடைபெற்ற இடத்தை முத்திரையிட்டு மூடுதல் மற்றும் பயன்படுத்தாத வாக்குச் சீட்டுகளைச் சேகரித்தல்

iv) வாக்குச் சாவடி தலைமை அலுவலர் மேற்பார்வையில் வாக்குப்பதிவு அலுவலர்களால் வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

v) வாக்குச் சாவடியின் தேர்தல் முடிவுகளை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.








## தேசிய வாக்காளர் தினத்திற்கான செயல்பாடு : பட்டிமன்றம்

தேர்தல்கள் மற்றும் பிரதிநிதித்துவக் குடியரசு தொடர்பான தலைப்புகளில் பட்டிமன்றம் நடத்தப்பட வேண்டும். தலைப்புகளின் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

1. வாக்காளர் கல்வி : அவசியத் தேவை
2. வாக்களிப்பதை அரசு கட்டாயமாக்க வேண்டும்.
3. இணையதள வாக்களிப்பு:- முன்னேற்றமா அல்லது குழப்பத்திற்கான வழியா ?
4. கடுங்குற்றங்கள் சாட்டப்பட்ட வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட தகுதியிழப்பு செய்வது அவசியமா ?
5. தேர்தல் கருத்துக் கணிப்பு மற்றும் தேர்தல் முடிவு குறித்த கணிப்புகள் கட்டுப்படுத்த மற்றும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.








v) செலுத்தப்பட்ட வாக்குச்சீட்டுகளில் நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளைத் தனியாக அடுக்கி வைத்து, அவற்றை எண்ணிக்கையில் சேர்க்காமல் அவை என்ன காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டது என விளக்கமளிக்க வேண்டும்.

vi) இறுதியில் அதிக வாக்குகள் பெற்ற சின்னத்தை வெற்றி பெற்றதாக தேர்தல் நடத்தும் அலுவலர் (RO) அறிவிக்க வேண்டும்.

vii) **செயல்பாடு 3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்** ஒருங்கிணைப்பாளர் வகுப்பிலுள்ள மாணவர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்து கீழ்க்கண்டவற்றை வினவலாம்:-

- இன்று நீங்கள் கற்றுக் கொண்ட மூன்று செயல்பாடுகள்
- மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய இரண்டு செயல்பாடுகள்
- எந்த ஒரு செயல்பாடு குறித்து அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (மாணவர்கள் செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)

**ஒருங்கிணைப்பாளருக்கான குறிப்பு:**–பள்ளி மாணவர் மன்றத் தேர்தல் மற்றும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் மாதிரி தேர்தல் குறித்து மாணாக்கர்களை கீழ்க்காணும் தலைப்புகளில் கலந்துரையாட வினவலாம்.

- தேர்தல் கல்வியறிவுக் குழுவின் மாதிரி தேர்தலில் தற்போது கடைபிடிக்கப்பட்டிருக்கும் முறையிலுள்ள நிறைகள் மற்றும் குறைகள்
- ஏதேனும் குறிப்பிடத் தகுந்த குறிப்புகள் (observations)
- பள்ளி மாணவர் மன்றத் தேர்தலில் மேற்கொள்ளப்பட வேண்டியவை குறித்த பரிந்துரைகள்

## செயல்பாடு: திரைப்படத்தைத் திரையிடுதல் (நியூட்டன், இயற்கையின் கட்டமைப்பு, தேர்தல் இல்லை)

### கண்ணோட்டம்:

பள்ளியின் தேர்தல் கல்வியறிவுக் குழு செயல்பாடுகளின் ஒரு பகுதியாக, மாணவர்களுக்கு, தேர்தல்கள் மற்றும் தேர்தல் நடைமுறைகள் குறித்து ஒரு பருவத்திற்கு ஒரு சிறப்புத் திரைப் படம் / ஆவணப்படம் திரையிடப்படும்.

### கற்றல் வெளிப்பாடு :

தேர்தல் தொடர்பான அறிவுபூர்வமான எண்ணத்தை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக, திரையிடப்பட்ட திரைப்படங்கள் மற்றும் ஆவணப்படத்திலிருந்து தேர்தல்கள், தேர்தல் நடைமுறைகள் போன்றவை குறித்து மாணவர்கள் கற்றுக்கொள்ளவும், ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்க / பாராட்ட தெரிந்து கொள்ளவும் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### எதிர்பார்க்கப்படுகிற ஆவணத்திரைப்படங்கள்/ திரைப்படங்களின் பட்டியல்

அ) 2014ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் குறித்த திரைப்படம்

ஆ) நியூட்டன் (Newton)

இ) நோ எலக்ஷன் (No Election)

ஈ) பூட்நாத் ரிட்டர்ன்ஸ் (Bhootnath Returns)

உ) குத்ரத் நோ பந்த்ரன் (Kudrat No Bandharan)

ஊ) ஆல் த பிரசிடெண்ட்ஸ்' மென் (All the Presidents' Men)

எ) ப்ராஸ்ட் / நிக்ஸான் ?(Frost / Nixon)

ஏ) ஸ்விங் ஒட்(Swing Vote)

### தேவையான பொருட்கள்

i. திரை, படக்காட்சி இயந்திரம், மடிக்கணினி மற்றும் ஒலிபெருக்கிகள்

ii. ஒவ்வொரு மாணவருக்கும் குறிப்பேடு மற்றும் எழுதுகோல்

iii. தடித்த (Chart) மற்றும் தடித்த வண்ண எழுதுகோல்

**கால அளவு :** ஒரு பருவ காலத்திற்கு 4 பாட வேளைகள் ( ஒரு பருவத்திற்கு 1 சிறப்புத் திரைப்படம் / ஆவணப்படம்)

**கால வரையறை :** ஜுலை முதல் ஆகஸ்டு வரை

### முறை:

1. திரைப்படத்தைத் திரையிடுவதற்கு முன்னர், அத்தலைப்பு குறித்து மாணவர்கள் முன்னரே அறிய வேண்டும் என்பதற்காகவும், மாணவர்களின் தற்போதைய மனநிலையை மதிப்பிட வேண்டும்



15. இதே முறை அங்கீகரிக்கப்படாத கட்சியின் வேட்பாளர்களுக்கும், இறுதியில் சுயேட்சை வேட்பாளர்களுக்கும் பின்பற்றப்பட வேண்டும் .
16. இப்போது வாக்குச்சீட்டு தயார் நிலையில் உள்ளது.
17. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில், அதே முறையில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் உள்ளது என ஒருங்கிணைப்பாளர் மாணவர்களிடம் தெரிவிக்க வேண்டும்.
18. ஒருங்கிணைப்பாளர் வேட்பாளரின் பெயர் மற்றும் புகைப்படம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதையும் மற்றும் வாக்காளர்கள், அவர்களின் வாக்களிப்பினை முடிவு செய்வதற்காக வேட்பாளர்கள், அவர்களின் முந்தைய திட்டங்கள், செயல்கள் மற்றும் கட்சித் தேர்தல் அறிக்கைகள் போன்றவை குறித்த தெளிவான அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்பதனையும் வலியுறுத்த வேண்டும்.
19. **3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல் :** தனி நபர் செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு அனைத்து செயல்பாடுகளும் நினைவூட்டல் முறையில் பின்பற்றப் படவேண்டும். ஒருங்கிணைப்பாளர் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமர்ந்துள்ள மாணவர்களிடம் கீழ்க்கண்டவற்றை வினவலாம்.

- இன்று நீங்கள் கற்றுக் கொண்ட மூன்று செயல்பாடுகள்
- மனதில் வைத்து கொள்ள வேண்டிய இரண்டு செயல்பாடுகள்
- எந்த ஒரு செயல்பாடு பற்றி அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (மாணவர்கள் செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்).

### ஒருங்கிணைப்பாளருக்கான குறிப்பு

- செயல்பாட்டின் நிறைவிற்குப் பின்னர், தங்களுடைய வாக்குச்சீட்டினை மாணவர்களே தயாரித்ததற்காக ஒருங்கிணைப்பாளர் மொத்த வகுப்பினையும் அவர்களே பாராட்டிக் கொள்ளுமாறு கூற வேண்டும். பின்னர் வாக்குச்சீட்டில் வேட்பாளர்களின் பெயர்களைப் பட்டியலிடுவது நடுநிலையான வழியில் நடைபெற்றது என்பதையும், பட்டியலின் வரிசை வேட்பாளரின் தகுதியைச் சுட்டிக்காட்டாது என்பதையும் ஒருங்கிணைப்பாளர் மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வார். எனவே, அனைவரும் அவர்களின் வேட்பாளர்களை அறிந்து வைத்திருப்பதுடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் அவர்களின் வரிசையைப் பொருட்படுத்தாமல் அவர்கள் விரும்பும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும்.
- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் கடைசி விருப்புரிமையாக நோட்டா (NOTA) உள்ளது என்பதை ஒருங்கிணைப்பாளர் எடுத்துரைக்க வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் வாக்குப்பதிவு கருவியிலிருக்கும் 16 விருப்புரிமைகளில், இறுதி விருப்புரிமை எப்பொழுதும் நோட்டா (NOTA) இருக்கும். 16 வேட்பாளர்கள் இருக்கும் நேர்வில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடன் மற்றொரு இயந்திரம் இணைக்கப்பட்டு அதனுடன் நோட்டா விருப்புரிமை சேர்க்கப்படும்.
- உயரளவாக, 4 வாக்குப்பதிவு கருவிகள் ஒன்றாக இணைக்கப்படலாம். இதனால் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் 64 (16x4) (63 வேட்பாளர்கள் + நோட்டா) விருப்புரிமைகளைக் கொண்டிருக்கும். ஒரு தொகுதியில் 64-க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், வாக்குப்பதிவிற்கு மரபு வழியிலான வாக்குச்சீட்டுகளும் வாக்குப்பதிவு பெட்டியும் பயன்படுத்தப்படும் என்ற தகவலை ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பார்.



5. விவாதத்திற்குப் பின்னர், தேர்தல் கல்வியறிவுக் குழு அமைந்துள்ள சட்டமன்றத் தொகுதிக்கான வேட்பாளர்களாக நடிப்பதற்கு முன்வரும் 15 மாணவர்களை அழைக்கவும்.

6. அரசியல் சின்னங்களின் பட்டியலை, மாணவர்களிடம் அளிக்க வேண்டும். அதில் 5 சின்னங்கள் தேசியக் கட்சிகளையும், 4 சின்னங்கள் அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகளையும் குறிக்கும். ஏனைய 3 சின்னங்கள் பதிவு பெற்ற, ஆனால் அங்கீகாரமற்ற மாநிலக் கட்சிகளையும் மேலும் 3 சின்னங்கள் சுயேட்சை வேட்பாளர்களையும் குறிக்கும். (சின்னங்களின் பட்டியல் (பக்கம் 44ல் வழங்கப்பட்டுள்ளன).

7. தோராயமான முறையில், 15 தன்னார்வலர்கள் (மாணவ வேட்பாளர்கள்) ஒவ்வொருவருக்கும் ஒரு சின்னம் ஒதுக்கவும்.

8. வாக்குச்சீட்டில் தேசியக் கட்சிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகளைச் சார்ந்த வேட்பாளர்களின் பெயர்கள் முதலில் இடம் பெறும் எனவும், அதனைத் தொடர்ந்து பதிவு பெற்ற ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் வேட்பாளர்களின் பெயர்களுடன் கடைசியில் சுயேட்சை வேட்பாளர்களின் பெயர்கள் வாக்குச்சீட்டில் இடம்பெறும் எனவும் வகுப்பு முழுவதற்கும் விளக்குதல்.

9. மேற்கூறிய மூன்று வகைகளுக்குள் உள்ள வேட்பாளர்களின் பெயர்கள் அகர வரிசையில் நாடாளுமன்றத் தேர்தல்கள் குறித்த நேர்வில், தேவநாகரி வரி வடிவிலும், மாநில சட்டமன்றத் தேர்தல்கள் குறித்த நேர்வில் மாநிலத்தின் ஆட்சி மொழி வடிவிலும் எழுதப்படும்.

10. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்திற்கான வாக்குச்சீட்டினைத் தயாரிப்பது குறித்து மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்களிடம் அறிவிப்பு செய்தல் வேண்டும். ஒரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் ஒரே நேரத்தில் 16 விருப்புரிமைகள் இருக்கும். இறுதி விருப்புரிமையாக எப்பொழுதும் நோட்டா (NOTA) இடம் பெறும் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

11. 15 தன்னார்வலர்கள்(மாணவ வேட்பாளர்கள்) ஒவ்வொருவரிடமும் வெற்றுத்தாள் சீட்டினை வழங்கி, அதில் அவர்களின் பெயரை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதுமாறு கோருதல்.

12. இதனிடையே, எஞ்சியுள்ள மாணவர்களிடம் வாக்குச்சீட்டின் தகவல் தொகுப்பில் கொடுக்கப்பட்ட மாதிரியின்படி, சின்னம் மற்றும் வேட்பாளர்களின் பெயர்களுக்கு வெறுமையாக இடம் அளித்து, கட்டங்கள் மற்றும் நெடுவரிசையுடன் கூடிய வாக்குச்சீட்டினை தயாரிக்குமாறு கோருதல். விவரிக்கப்பட்டவாறு, வரிசை / நெடுவரிசையின் இறுதியில் NOTA இடம்பெறலாம்.

13. அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளுக்கான சின்னங்களைக் கொண்டிருக்கும் தன்னார்வலர்களை (மாணவ வேட்பாளர்களை) அழைத்து, அவர்களின் பெயர்கள் வாக்குச்சீட்டில் அகர வரிசைப்படி இடம் பெறும் என்று விளக்குதல். ஒருங்கிணைப்பாளர் வாக்குச்சீட்டில் வேட்பாளர்களின் பட்டியலை பட்டியலிடுவதற்கான வழிகாட்டிக் குறிப்புகளை வாசிப்பதற்கு மாணவர்களுக்கு உதவுவதுடன், தன்னார்வலர்களுக்கு (மாணவ வேட்பாளர்களுக்கு) உதவி செய்வார்.

14. தன்னார்வலர்கள் அவர்களின் பெயர்களை மாதிரி (Dummy) வாக்குச்சீட்டில் எழுதி அதனுடன் அவர்களின் பெயர்களுக்கு எதிரே அவர்களது கட்சியின் சின்னத்துடன் கூடிய வாக்குச்சீட்டினை ஒட்டுதல். அவர்களுடைய பெயர் மற்றும் கட்சியின் சின்னத்தின் முன்னால் தனது உருவத்தை வரையலாம்.





என்ற நோக்கத்திலும், தேர்தல்கள் மற்றும் பங்கேற்பு குறித்த சிறிய விவாதத்தில், மாணவர்களை, ஒருங்கிணைப்பாளர் ஈடுபடுத்துவார்.

2. அதன் பின்னர் மாணவர்களுக்கு திரைப்படம் காட்டப்படும்.

3. திரைப்படம் திரையிடப்பட்ட பின்னர் மாணவர்களுக்கிடையே படம் குறித்த விவாதத்தினை ஒருங்கிணைப்பாளர் நடத்த வேண்டும். அவ்விவாதத்தில் வருகிற கேள்விகளுக்கு பதிலளிக்கலாம். அவையாவன:–

a) தேர்தலில் உட்பொதிந்துள்ள கூறுகள் யாவை ?

b) பிரதிநிதித்துவ குடியாட்சிக்கு, தேர்தல்கள் ஏன் அவசியமாகிறது ?

c) உரிய வயதடைந்த (பதினெட்டு வயது நிறைவடைந்தவர்கள்) அனைவரும் வாக்களித்தல் என்றால் என்ன ?

d) தகுதியுடைய குடிமக்கள் தேர்தல்களில் பங்கேற்பதன் முக்கியத்துவம் என்ன ?

e) நேர்மையான, சுதந்திரமான, நடுநிலையான மற்றும் பாகுபாடு இல்லாத தேர்தல்களை நடத்துவதில், அதனை நடத்துகிற தேர்தல் அதிகார அமைப்பின் பணி மற்றும் நிலை யாது ?

f) பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் தேர்தல் எவ்வாறு வேறுபடுகிறது ?

g) பிற நாடுகளில் நடைபெறும் தேர்தல்களில் பொது வாக்கெடுப்பு முறையில் / நேர்முக வாக்களிப்பதில் வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது அல்லது அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பதை உறுதி செய்வதை எவ்வாறு வெற்றிகரமாக மேலாண்மை செய்கின்றன ?

h) பள்ளி மாணவர் மன்றத் தேர்தல்களின் அவசியம் என்ன ?

i) பிற நாடுகளில் உள்ள பள்ளி மாணவர் மன்றத் தேர்தல்களிலிருந்து இந்தியாவிலுள்ள பள்ளி மாணவர் மன்றத் தேர்தல் எவ்வாறு வேறுபடுகிறது ?



## செயல்பாடு: CHUNAV YANTR (மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine(EVM)) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதிசெய்யும் கருவி (Voter Verifiable Paper Audit Trail (VVPAT)) மற்றும் வாக்குச் சீட்டு தயார் செய்தல்

### கண்ணோட்டம்:

மாணவர்களை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT) ஆகியவற்றைப் பயன்படுத்துதல் குறித்து நன்கு பயிற்சி பெற வேண்டும் என்பதே இச்செயல்பாட்டின் நோக்கமாகும். இச்செயல்பாட்டின் மூலம், மாதிரி வேட்பாளர்கள், அவர்களின் சின்னங்கள் மற்றும் நோட்டா உள்ளடங்கிய தங்களது சொந்த வாக்குச் சீட்டினை மாணவர்கள் உருவாக்குவர்.

### கற்றலின் வெளிப்பாடு:

i) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) என்றால் என்ன ? வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT) யின் பங்குபணி யாது ?

ii) வாக்குச் சீட்டு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பெயர்கள் எவ்வாறு வாக்களிப்போருக்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பது குறித்து அறிதல்.

iii) தேர்தல் நடைமுறையில் நேர்மைத்தன்மை குறித்து அறிதல்.

iv) நோட்டா, வாக்குப் பதிவு சாதனத்தில் உள்ள கடைசி தெரிவாகும் என்பதை அறிதல்.

v) பாராளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளுக்கு இடையேயான வேறுபாடுகள் குறித்து அறிதல்.

### தகவல் தொகுப்பு

i) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) என்றால் என்ன ? வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT) குறித்த திரைப்படம்

ii) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்த கையேடுகள்

iii) மாதிரி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT)

iv) வாக்குச் சீட்டு குறித்து இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்களிலிருந்து எடுக்கப்பட்டவை (பக்கம் 48)

v) வாக்குச் சீட்டில் வேட்பாளர்களின் பட்டியல் குறித்த வழிமுறைகள் (ப.எண்.48)

vi) 15 சின்னங்களின் பட்டியல் (பக்கம் 47)



### தேவைப்படும் பொருட்கள்

i) பேனா / பென்சில்

ii) பசை

iii) 15 வெற்று ஒட்டு காகிதச் சீட்டுகள்(Blank stick on paper slips)

iv) சின்னங்களுடன் கூடிய 15 ஒட்டு காகிதச் சீட்டுகள்

v) 1 நோட்டா ஒட்டு காகிதச் சீட்டு

vi) திரை, படக்காட்சி இயந்திரம், மடிக்கணினி மற்றும் ஒலிபெருக்கிகள்

**கால அளவு :** 30 நிமிடங்கள்

**கால வரையறை :** செப்டம்பர்- நவம்பர் இடையே ஏதாவது ஒரு நாளில்

### ஆயத்தமாதல்

தகவல் தொகுப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின் சாராம்சங்களை ஒருங்கிணைப்பாளர் கற்க வேண்டும்.

### செயல்முறை

1. ஒருங்கிணைப்பாளர், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT) குறித்த திரைப்படத்தைத் திரையிடுவார்.
2. படம் திரையிட்ட பின்னர், அவர், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்துவது குறித்து மாணவர்களுக்கு ஏதேனும் வினாக்களை அல்லது ஐயப்பாடுகளை எழுப்புவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.
3. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்த படத்தைத் திரையிட்ட பிறகு மாணவர்கள் அவர்களாகவே வாக்குச் சீட்டுகளைத் தயாரித்துக் கொள்ளுமாறும், தேர்தல் நடைபெறும் மாநிலத்தின் குடிமக்களாகத் தங்களைக் கற்பனை செய்துகொள்ளுமாறும் மாணவர்களை ஒருங்கிணைப்பாளர் ஊக்குவித்தல் வேண்டும்.
4. ஒருங்கிணைப்பாளர் தேர்தல் கல்வியறிவுக் குழு அமைக்கப்பட்டுள்ள பகுதியின் சட்டமன்றத் தொகுதியைத் தெரிந்திருக்க வேண்டும். அவர், சிறிய விவாதங்களில் மாணவர்களை ஈடுபடுத்தி பின்வரும் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

- சட்டமன்றத் தேர்தல் என்றால் என்ன ? எவ்வாறு அவை பாராளுமன்றத் தேர்தல்களிலிருந்து மாறுபடுகின்றன ?
- தொகுதி என்றால் என்ன ?
- சட்டமன்றத் தொகுதி என்றால் என்ன ? அவை பாராளுமன்றத் தொகுதி அல்லது வார்டு (கிராமப் பஞ்சாயத்து தேர்தல்களுக்கான தொகுதி) ஆகியவை போன்றதா ?
- ஒரு வாக்காளர் சட்டமன்றத் தேர்தல்களுக்காக, சட்டமன்றத் தொகுதி பற்றி தெரிந்திருக்க வேண்டுமா ? அல்லது பாராளுமன்றத் தொகுதி பற்றி தெரிந்திருக்க வேண்டுமா ?



